janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2021 டிசம்பர் 26 - 2022 ஜனவரி 01 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 38

டிசம்பர் 26 1925 சிறப்பிதழ்




டிசம்பர்
26
1925
எளிய மக்களின்
வலிய ஆயுதம்
இந்தியக்
கம்யூனிஸ்ட் கட்சி
வாழ்க!
க.மாரிமுத்து எம்.எல்.ஏ.
திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதி
திருவாரூர் மாவட்டம்



A Product of Seyadu Spinning Mills
Whites
As pure as it gets.
Seyad Garments
SHIRTS
Marketed By:
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003.- PH.: 0462 2323086
E-Mail : shi@seyadgroup.com




Cell : 94887 10087
94444 30123
vetriepolymers@yahoo.in
VETRIE POLYMERS
மலர் சிறக்க வாழ்த்துக்கள்
Vetrie TM
VETRIE TM POLYMERS
Manufacturers
VETRIE TM PVC PIPES
1/2" முதல் 12" வரை தரமான PVC & HDPE பைப் தயாரிப்பாளர்கள்
DEALERS
GI Pipes & Fittings
CPVC Pipes & Fittings
PVC & SWR Fittings
HDPE Hoses
Water Tanks
CP Bathroom Fittings
Gun Metal Valves
Pumps
Sanitary Wares
Electrical Accessoreis
Cements
Bolts, Nuts & Hardwares
150, ஓமலூர் மெயின் ரோடு, மாமாங்கம்,
சேலம் - 636 302.




அரசியலில் நேர்மை!
பொதுவாழ்வில் தூய்மை!!
லட்சியத்தில் உறுதி
மலர் சிறக்க
வாழ்த்துக்கள்
திருப்பூர் மாநகர் மாவட்ட ம.தி.மு.க
மாநில நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள்,
அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள்
R.நாகராஜ்
மாநகர் மாவட்டச் செயலாளர்
படிக்க சங்கொலி
பார்க்க மதிமுகம்

# பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம்
## திருப்பூர் மாவட்டம்







| வ.எண் | திட்டத்தின் பெயர் | எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 15-வது மத்திய நிதிக்குழு மானியம் - மாவட்ட ஊராட்சி | 7 | 38.37 |
| 2 | 15-வது மத்திய நிதிக்குழு மானியம் - வட்டார ஊராட்சி | 15 | 75.85 |
| 3 | 15-வது மத்திய நிதிக்குழு மானியம் | 1 | 7.77 |
| 4 | ஆதி திராவிடர் குக்கிராம வளர்ச்சிப்பணிகள் - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் | 152 | 592.18 |
| 5 | பள்ளி உட்கட்டமைப்பு திட்டம் (CSIDS) | 1 | 4.90 |
| 6 | பொதுநிதிப் பணிகள் - வட்டார ஊராட்சி | 10 | 10.41 |
| 7 | பொதுநிதிப் பணிகள் - மாவட்ட ஊராட்சி | 12 | 17.39 |
| 8 | முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் வழங்கும் திட்டம் (CMSPGHS) | 19 | 39.90 |
| 9 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS) | 7 | 36.16 |
| 10 | TNRISS - STREAM-III RENEWAL BT | 1 | 11.70 |
| 11 | TNRISS - STREAM-II STRENGTHENING | 2 | 70.30 |
| 12 | TNRISS - STREAM-I UPGRADATION | 1 | 38.00 |
| 13 | தன்னிறைவுத் திட்டம் | 2 | 17.64 |
| 14 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் (MGNREGS) | 96 | 462.04 |
| 15 | SCPAR PRIORITY WORKS - BT ROADS | 3 | 151.80 |
| 16 | PMGSY III (2020-21) | 1 | 90.34 |
| | | 330 | 1664.74 |

டாக்டர் **எஸ்.வினீத்** இ.ஆ.ப
மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர்

வக்கீல் **எஸ்.குமார்** B.Com., B.L
ஒன்றியக்குழுத் தலைவர்

**அபிராமி அசோகன்**
ஒன்றியக்குழு துணைத் தலைவர்

**கலைச்செல்வி**
ஒன்றிய ஆணையாளர்

**மகேஸ்வரன்**
வட்டார வளர்ச்சி அலுவலர்

ஒன்றியக்குழு உறுப்பினர்கள்
ஏ.பாலகிருஷ்ணன், எஸ்.பாலுசாமி, எஸ்.துளசிமணி, எஸ்.லோகுபிரசாந்த், பி.சுப்பிரமணி வி.கங்கா, ஈ.ஜோதிபாசு, பி.ஸ்ரீபிரியா, கே.மோகனப்பிரியா, எஸ்.ராஜேஸ்வரி, பி.மலர்விழி மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள்






# கருமாபாளையம் ஊராட்சி
## அவிநாசி வட்டம், அவிநாசி

### 2020 - 2021 ஆம் ஆண்டில் கருமாபாளையம் ஊராட்சியில் நடைபெற்ற பணிகள்

| திட்டப்பணிகள் | மதிப்பீடு |
|---|---|
| குடிநீர் குழாய் விஸ்தரிப்பு | 950000 |
| புதியதாக மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி மற்றும் பைப் லைன் JJM | 1611500 |
| புதியதாக மின் மோட்டார் அமைத்தல் இரண்டு | 550000 |
| கான்கிரீட் சாலை | 1000000 |
| தார்சாலை அமைத்தல் 14வது நிதிக்குழு | 3800000 |
| வடிகால் அமைத்தல் | 1430000 |
| இலவச வீட்டு மனைப்பட்டா | 15 பயனாளிகள் |
| நான்காவது குடிநீர் திட்டம் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளது | 3500000 |





ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்
T.புஷ்பா M.கார்த்திகேயன் K.பெரியசாமி P.சகுந்தலா
R.மரகதம் M.சுமதி K.தனலட்சுமி R.அருள்பிரியா

ஊராட்சி செயலாளர்
K.ராம்குமார்




S.பூங்கொடி சக்திவேல்
தலைவர்

S.சண்முகசுந்தரம்
துணைத்தலைவர்

# உடுமலை ஊராட்சி ஒன்றியம்

## திருப்பூர் மாவட்டம்



2020 - 2021 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் விபரம்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மொத்த பணிகள் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 15வது நிதிக்குழு மானியம் (மாவட்ட ஊராட்சி ) | 16 | 70.50 |
| 2 | 15வது நிதிக்குழு மானியம் ( வட்டார ஊராட்சி ) | 41 | 252.00 |
| 3 | ஆதி திராவிடர் குக்கிராமங்கள் மேம்பாடு திட்டம் - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் | 283 | 740.50 |
| 4 | பொதுநிதி பணிகள் - மாவட்ட ஊராட்சி | 6 | 20.50 |
| 5 | பொது நிதி பணிகள் - வட்டார ஊராட்சி | 30 | 106.43 |
| 6 | முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம் ( MGNREGS ) | 100 | 258.60 |
| 7 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் ( MGNREGS ) | 1915 | 2472.37 |
| 8 | PMGST - III - 2020 - 2021 | 1 | 236.56 |
| 9 | RCSIDS | 1 | 4.96 |
| 10 | TNRRIS - STREAM - II - STRENGTHENING | 6 | 233.00 |
| 11 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் ( MLACDS ) | 41 | 122.12 |
| 12 | சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் | 2 | 22.00 |
| | | மொத்தம் | 4539.54 |

டாக்டர் **எஸ்.வினீத்** இ.ஆ.ப
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருப்பூர்

திரு **அ.லெட்சுமணன்** பி.காம்.,
இணை இயக்குனர் / திட்ட இயக்குனர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பூர்

**மகாலட்சுமி முருகன்** M.A., M.Phil.,
ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்

**கே.ஏ.சண்முக வடிவேல்**
ஊராட்சி ஒன்றியகுழுத் துணைத்தலைவர்

**எஸ்.மணிகண்டன்**
வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)

**எம்.ரொனால்டு செல்டன் பெர்ணான்டஸ்**
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)

**ஒன்றியக் குழு உறுப்பினர்கள்**

ஈ.விமலா ஈஸ்வரமூர்த்தி கே.வி.பாலகிருஷ்ணன் திருமலைசாமி ப.நாகமாணிக்கம் ந.அருள்குமார் குருவம்மாள் சௌந்தரராஜன் ஆர்.மோகன்ராஜ் ராசாத்தி புவனேஷ்வரி சிவசங்கர் கவிதாமணி ரங்கநாதன் திலகவதி பழனிகுமார் ம.விவேக் கமலம் நவநீதகிருஷ்ணன் கே.வி.சங்கரன் ராஜேஸ்வரி ராமசாமி கே.பி.குப்புசாமி உமாமகேஸ்வரி நந்தகுமார் செ.காளிமுத்து ஜான்சிராணி ராஜ்குமார் க.செல்வராஜ் முருகானந்தம் ரா.லாசர் சுவாமிநாதன் தங்கமணி ஜெயப்பிரகாஷ் சுமதி கார்மேகம்

## உடுமலை ஊராட்சி ஒன்றியம்

# ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம்

## திருப்பூர் மாவட்டம்



2020 - 2021 ஆம் ஆண்டுக்கு மேற்கொள்ளப்பட்ட / மேற்கொள்ளப்படும் பணிகள் விபரம்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மொத்த பணிகள் | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | 14-வது நிதிக்குழு மானியம் | 1 | 4.62 |
| 2 | 15-வது நிதிக்குழு மானியம் - வட்டார வளர்ச்சி | 27 | 83.68 |
| 3 | 15-வது நிதிக்குழு மானியம் - மாவட்ட ஊராட்சி | 11 | 29.95 |
| 4 | 15-வது நிதிக்குழு மானியம் - கிராம ஊராட்சி | 25 | 58.12 |
| 5 | ஆதி திராவிடர் குக்கிராமங்கள் மேம்பாடு திட்டம் - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் | 118 | 218.76 |
| 6 | பொதுநிதி - வட்டார ஊராட்சி | 114 | 158.89 |
| 7 | பசுமை வீடுகள் திட்டம் | 45 | 94.5 |
| 8 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் | 94 | 494.67 |
| 9 | RCSIDS | 1 | 17.32 |
| 10 | தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் ( புதுப்பித்தல் ) | 1 | 22.11 |
| 11 | தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் ( மேம்பாடு செய்தல் ) | 7 | 186.09 |
| 12 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் | 8 | 99.25 |
| | மொத்தம் | 452 | 1,467,95 |

மாண்புமிகு
**சு.முத்துச்சாமி**
வீட்டு வசதித்துறை அமைச்சர்

மாண்புமிகு
**மு.பெ.சாமிநாதன்**
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

மாண்புமிகு
**கயல்விழி செல்வராஜ்**
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்

டாக்டர் **எஸ்.வினீத்** இ.ஆ.ப மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர்

**E.பிரேமா ஈஸ்வரமூர்த்தி**
ஒன்றியக் குழுத்தலைவர்

**டி.சாந்திலட்சுமி**
ஆணையாளர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
ஊராட்சி ஒன்றிம், ஊத்துக்குளி

**ஆ.ஜோதிநாத்**
வட்டார வளர்ச்சி அனுவலர்
ஊராட்சி ஒன்றியம், ஊத்துக்குளி

## ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம்



ஒன்றியக்குழு உறுப்பினர்கள்
ஜெ.சுசிலா, ம.சாந்தி, பா.சாந்தி, ர.ரேகா, ப.சரண்யா,
சே.பூங்கோதை, ப.சுவேதா, நா.மணிமேகலை
ஜனசக்தி சிறப்பிதழ்
மலர் சிறக்க வாழ்த்துக்கள்!
மணிமேகலை முருகேசன்
ஒன்றியக்குழு தலைவர்
கோட்டூர் ஊராட்சி ஒன்றியம்




ஜனசக்தி
மலர் சிறக்க வாழ்த்துக்கள்!
ஒன்றுபட்டு
போர் புரிந்தே
உயர்த்துவோம்
செங்கொடியை!
எஸ்.தமயந்தி
17-வது மாவட்ட ஊராட்சி உறுப்பினர்
முத்துப்பேட்டை ஒன்றியம், திருத்துறைப்பூண்டி
கே.சுஜாதா பி.காம்
14-வது மாவட்ட ஊராட்சி உறுப்பினர்
திருத்துறைப்பூண்டி ஒன்றியம்




புதியதோர் உலகம் செய்வோம் **ஜனசக்தி** மக்கள் வாரஇதழ்

# சிறப்பிதழ்

போராட்ட நடையோட்ட போது!
**கம்யூனிஸ்ட் கட்சி செயல்படத் தடை**
**1939-42. 45-47, 48-50**

பொதுவுடமைப் போராளி
தோழர் **தா.பாண்டியன்**
**படத்திறப்பு - புகழ் அஞ்சலி**

**27-12-2021**
திங்கள் மாலை 3 மணி
பெரியார் திடல், நடிகவேள் எம்.ஆர்.இராதா மன்றம்,
எழும்பூர் - சென்னை

தோழர் தா.பாண்டியன் படத்திறப்பாளர்
முதுபெரும் தோழர். **இரா.நல்லகண்ணு**

புகழஞ்சலி
மாண்புமிகு **மு.க.ஸ்டாலின்**
தலைவர், திராவிட முன்னேற்றக் கழகம்
முதலமைச்சர், தமிழ்நாடு அரசு

தோழர். **டி.ராஜா**
பொதுச் செயலாளர், சி.பி.ஐ

ஆசிரியர் **கி.வீரமணி**
தலைவர், திராவிடர் கழகம்

திரு. **வைகோ** எம்.பி
பொதுச்செயலாளர், மறுமலர்ச்சி தி.மு.க

தோழர். **தொல்.திருமாவளவன்** எம்.பி
தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

திரு. **எம்.எச்.ஜவாஹிருல்லா** எம்.எல்.ஏ
தலைவர், மனிதநேய மக்கள் கட்சி

திரு. **கே.எஸ்.அழகிரி**
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

தோழர். **கே.பாலகிருஷ்ணன்**
மாநிலச்செயலாளர், சி.பி.ஐ (எம்)

திரு. **கே.எம்.காதர் மொகிதீன்**
தேசியத் தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

திரு. **தி.வேல்முருகன்** எம்.எல்.ஏ
தலைவர், தமிழக வாழ்வுரிமை கட்சி

தோழர். **ஏ.எம்.சலீம்**
புதுச்சேரி மாநிலச்செயலாளர், சி.பி.ஐ

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**
தமிழ்நாடு மாநிலக்குழு

சேரன் வரைகலையகம்
98946 56111 0421 - 4360111






## 1925 முதல் 2021 வரை கட்சிக் காங்கிரஸில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச் செயலாளர்கள்



| மாநாடு | ஆண்டு | மாநிலம் | பொதுச் செயலாளர் |
|---|---|---|---|
| அமைப்பு மாநாடு | 1925 டிசம்பர் 25, 26 | உ.பி., கான்பூர் | பாகர்ஹட்டா, எஸ்.வி.காட்டே |
| 1–வது காங்கிரஸ் | 1943 மே 23 – ஜூன் 31 | மகாராஷ்டிர பம்பாய் | பி.சி.ஷோசி |
| 2–வது காங்கிரஸ் | 1948 பிப். 28 – மார்ச் 7 | மேற்கு வங்கம் கொல்கத்தா | பி.டி.ரணதேவ் |
| 3–வது காங்கிரஸ் | 1953 டிச. 27 ஜன. 3 | மதுரை | அஜய் கோஷ் |
| 4–வது காங்கிரஸ் | 1956 ஏப். 16 – 29 | கேரளா பாலக்காடு | அஜய் கோஷ் |
| 5–வது காங்கிரஸ் (சிறப்பு மாநாடு) | 1958 ஏப்ரல் 6 – 13 வரை | பஞ்சாப் அமிர்தசரஸ் | அஜய் கோஷ் |
| 6–வது காங்கிரஸ் | 1961 ஏப்ரல் 7 –13 | ஆந்திரா விஜயவாடா | அஜய் கோஷ் |
| 7–வது காங்கிரஸ் | 1964 டிசம்பர் 13–23 | மகாராஷ்டிர பம்பாய் | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 8–வது காங்கிரஸ் | 1968 பிப். 7 –15 | பீகார் பாட்னா | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 9–வது காங்கிரஸ் | 1971 அக். 3 –10 | கேரளா கொச்சி | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 10–வது காங்கிரஸ் | 1975 ஜன. 27 – பிப். 2 | ஆந்திரா விஜயவாடா | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 11–வது காங்கிரஸ் | 1978 மார்ச் 31 ஏப்ரல் 7 | பஞ்சாப் படிண்டா | எஸ்.ஏ.டாங்கே, தலைவர் சி.ராஜேஸ்வரராவ் |
| 12–வது காங்கிரஸ் | 1982 மார்ச் 21 –28 | உ.பி.வாரணாசி | சி.ராஜேஸ்வரராவ் |
| 13–வது காங்கிரஸ் | 1986 மார்ச் 12– 17 | பீகார் பாட்னா | சி.ராஜேஸ்வரராவ் |
| 14–வது காங்கிரஸ் | 1989 மார்ச் 6 –12 | மேற்கு வங்கம் கல்கத்தா | சி.ராஜேஸ்வரராவ் |
| 15–வது காங்கிரஸ் | 1992 ஏப்ரல் 10–14 | ஆந்திரா ஹைதராபாத் | இந்திரஜித் குப்தா |
| 16–வது காங்கிரஸ் | 1995 அக்டோபர் 7–11 | புதுடெல்லி | இந்திரஜித் குப்தா |
| 17–வது காங்கிரஸ் | 1998 செப். 14 – 19 | தமிழ்நாடு சென்னை | ஏ.பி.பரதன் |
| 18–வது காங்கிரஸ் | 2002 மார்ச் 26–31 | கேரளம் திருவனந்தபுரம் | ஏ.பி.பரதன் |
| 19–வது காங்கிரஸ் | 2005 மார்ச் 29 – ஏப்ரல் 3 | பஞ்சாப் சண்டிகர் | ஏ.பி.பரதன் |
| 20–வது காங்கிரஸ் | 2008 மார்ச் 23 – 27 | ஆந்திரா ஹைதராபாத் | ஏ.பி.பரதன் |
| 21–வது காங்கிரஸ் | 2012 மார்ச் 27 – 31 | பீகார் பாட்னா | சுதாகர் ரெட்டி |
| 22–வது காங்கிரஸ் | 2015 மார்ச் 25 – 29 | தமிழ்நாடு பாண்டி | சுதாகர் ரெட்டி |
| 23–வது காங்கிரஸ் | 2018 ஏப். 25 – 29 | கேரளா கொல்லம் | சுதாகர் ரெட்டி |
| தேசிய கவுன்சில் | | 2021 ஜூலை 19 | டி.ராஜா |

- 1925 பாகர்ஹட்டா நீக்கப்பட்டு எஸ்.வி.காட்டே பொதுச் செயலாளராகச் செயல்பட்டார்.
- 1931 முதல் 1933 வரை மீரத் சதி வழக்கிற்கு பின்பு எஸ்.வி.தேஷ்பாண்டே செயலாளராக இருந்தார். சிறையில் இருந்த தோழர்களுக்கு ஜி.அதிகாரி செயலாளராக இருந்தார்.
- 1933 பின்பு மீரத் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு கல்கத்தாவில் நடந்த கூட்டத்தில் டாக்டர் ஜி.அதிகாரி பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.
- 1935 டிசம்பர் இறுதியில் பி.ஷி.ஷோசி பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றார். 1948 வரை பொதுச் செயலாளராக நீடித்தார்.
- 1950 ஜூன் கல்கத்தா கூட்டம் சி.ராஜேஸ்வரராவ் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்
- 1962 ஏப்ரல் 23 முதல் 29 வரை அஜய் கோஷ் மரணத்திற்கு பிறகு தேசியக்குழு கூட்டம் எஸ்.ஏ.டாங்கே தலைவர், இ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு பொதுச் செயலாளர்
- 1964 ஏப்ரல் 11 அன்று நடைபெற்ற தேசியக்குழு கூட்டத்திலிருந்து 31 பேருடன் வெளிநடப்பு செய்து சிபிஐ(எம்) என்ற மற்றொரு கட்சியை உருவாக்கினர்,
- 1990 ஏப்ரல் 17 முதல் 19 வரை தேசியக்குழு கூட்டம் இந்திரஜித் குப்தா பொதுச் செயலாளர்
- 1993 மார்ச் 11 முதல் 14 வரை அமைப்பு நிலை மாநாடு கேரளா திருச்சூர்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில மாநாடுகள்





| மாநாடு | ஆண்டு | இடம் | மாநிலச் செயலாளர் |
|---|---|---|---|
| 1-வது மாநாடு | 1951 | சென்னை | பி.ராமமூர்த்தி |
| 2-வது மாநாடு | 1953 நவ.22–29 | பேரூர், கோவை | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 3-வது மாநாடு | 1956 பிப். 12–21 | திண்டுக்கல் | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 4-வது மாநாடு | 1958 (சிறப்பு) | திருச்சி | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 5-வது மாநாடு | 1959 மே. 26–31 | காரைக்குடி | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 6-வது மாநாடு | 1961 | கோவை | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 7-வது மாநாடு | 1962 அக். 29 நவ.4(சிறப்பு) | சென்னை | மணலி சி.கந்தசாமி |
| 8-வது மாநாடு | 1964 | மதுரை | எம்.கல்யாணசுந்தரம் |
| 9-வது மாநாடு | 1968 ஜன. 27–30 | வேலூர் | எம். கல்யாணசுந்தரம் |
| 10-வது மாநாடு | 1971 செப். 9– 12 | திருச்சி | எம்.கல்யாணசுந்தரம் |
| 11-வது மாநாடு | 1974 டிச.26–30 | சென்னை | எம்.கல்யாணசுந்தரம் |
| 12-வது மாநாடு | 1978 மார்ச் 16–19 | கோவை | ப.மாணிக்கம் |
| 13-வது மாநாடு | 1982 மார்ச் 3–7 | இராஜபாளையம் | ப.மாணிக்கம் |
| 14-வது மாநாடு | 1986 பிப்.27 மார்ச் 2 | நெல்லை | ப.மாணிக்கம் |
| 15-வது மாநாடு | 1989 பிப். 23–26 | திருச்சி | ப.மாணிக்கம் |
| 16-வது மாநாடு | 1992 மார்ச் 4–7 | மதுரை | ஆர்.நல்லகண்ணு |
| 17-வது மாநாடு | 1995 செப்.13–16 | சென்னை | ஆர் நல்லகண்ணு |
| 18-வது மாநாடு | 1998 ஜூலை 24-26 | கடலூர் | ஆர்.நல்லகண்ணு |
| 19-வது மாநாடு | 2002 மார்ச் 12–15 | தருமபுரி | ஆர்.நல்லகண்ணு |
| 20-வதுமாநாடு | 2005 மார்ச் 5–8 | திருவாரூர் | தா.பாண்டியன் |
| 21-வது மாநாடு | 2008 பிப்.29 மார்ச் 3 | புதுக்கோட்டை | தா.பாண்டியன் |
| 22-வதுமாநாடு | 2012 பிப்.17–19 | இராஜபாளையம் | தா.பாண்டியன் |
| 23-வதுமாநாடு | 2015 பிப்.25–28 | கோவை | இரா.முத்தரசன் |
| 24-வதுமாநாடு | 2018 மார்ச் 28–31 | மன்னார்குடி | இரா.முத்தரசன் |

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட நாள் பற்றி ஒரு குறிப்பு

சி.பி.ஐ. நிறுவப்பட்ட நாள் குறித்து, 1959 ஆகஸ்ட் வரை, வெவ்வேறு தோழர்கள் வெவ்வேறு ஆண்டுகளையும் தேதிகளையும் கூறி வந்தார்கள். இந்த விவகாரம் பற்றி விவாதித்து, ஒருமனதான முடிவெடுத்து பிரச்சினைக்கு முடிவுகட்ட 1959 ஆகஸ்ட் 18 அன்று சி.பி.ஐ.யின் மத்திய செயற்குழு கூடியது.

அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பல்வேறு கோணங்களிலும் ஆராய்ந்து, இறுதியில் 1925 டிசம்பர் 26 அன்று கான்பூரில் மாநாடு நடைபெற்ற தேதியே கட்சியின் நிறுவன நாள் என்று முடிவிற்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட நாள் பற்றிய தகவலை இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டிருந்தது.

கட்சி நிறுவிய நாள் பற்றி முடிவெடுத்த மத்திய செயற்குழுவில், பொதுச் செயலாளர் அஜாய் கோஷ், பி.டி.ரணதிவே, பி.சி.ஜோஷி, எம்.பசவ புன்னையா, இசட்.ஏ.அகமது, எஸ்.ஏ.டாங்கே, ஏ.கே. கோபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் (மினிட்ஸ்) பவசபுன்னையாவால் எழுதப்பட்டது. அதில் ‘கட்சியின் நிறுவன நாள் 1925 டிசம்பர் 26, கூட்டத்தில் கலந்து கொண்ட எவரும் வேறு எந்தத் தேதியையும் முன்வைக்கவில்லை’ என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

1959 ஆகஸ்ட் 20 அன்று ரிவ்யூ ஆஃப் இந்தோனேசியா’ என்ற பத்திரிகையின் ஆசிரியருக்கு பி.டி.ரணதிவே ஒரு கடிதம் எழுதினார்.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925 டிசம்பரில் தோற்றுவிக்கப்பட்டது என்று எழுதியிருக்கிறார். அதன்பின் வங்க மாநிலக் குழுவிற்கு 1960ல் இ.எம்.எஸ். எழுதிய கடிதத்தில் இதே கருத்தை பதிவு செய்திருக்கிறார்.

கட்சியின் இந்தக் கருத்தை முஸாபர் அகமதும் வங்காள மாநிலக்குழு தலைமைத் தோழர்களும் ஏற்கவில்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவன நாள் 1920 அக்டோபர் என்று முஸாபர் அகமது வெளியிட்ட புத்தகத்திலுள்ள செய்தியின் அடிப்படையில், 1960ல் கட்சியின் 40வது ஆண்டுவிழாவைக் கொண்டாட வங்காள மாநிலக்குழு விரும்பியது.

ஆனால் இந்த முயற்சிக்கு எதிராக வங்காள மாநிலக் குழுவிற்கு 1960 ஜூன் 10 அன்று அன்றைய பொறுப்பு பொதுச் செயலாளராக இருந்த இ.எம்.எஸ். கடிதம் எழுதியதால், 40வது ஆண்டுவிழா நடத்தும் முயற்சி வெற்றி பெறவில்லை.

### 1920ல் தாஷ்கண்டில் நிறுவப்பட்டது குறித்து

1920 அக்டோபர் 17 அன்று தாஷ்கண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டபோது எம்.என்.ராய், (எம்.என்.ராயின் முதல் மனைவியும் அமெரிக்க பிரஜையுமான) எவ்லின் ட்ரெண்ட் ராய், அபானி முகர்ஜி, (அபானியின் மனைவியும் வெளிநாட்டு பிரஜையுமான) ரோஸா ஃபிடிங் கோஹாஃப், மொகமத் அலி, மொகமது ஷஃபிக், எம்.பி.டி.ஆச்சார்யா ஆகிய ஏழு பேர் கலந்து கொண்டனர்.

இதுபற்றிய விபரங்கள் ‘தாஷ்கண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவியது பற்றி’ என்ற தலைப்பில் 1964 அக்டோபர் ‘நியூஏஜ்’ இதழில் டாக்டர் தேவேந்திரநாத் கௌசிக் எழுதிய கட்டுரையில் விரிவாக உள்ளன. இது ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்பது உண்மையே. ஆனால் அதற்கு அரசியல் முக்கியத்துவம் இல்லை. சில தனிநபர்கள், அவர்களில் சிலர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் அயல்நாடுகளைச் சேர்ந்தவர்கள். அயல்நாடு ஒன்றில் கூடி, தங்களை கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைத்துக் கொண்டனர். கலந்துகொண்ட ஏழு பேரில் இரண்டுபேர் அயல் நாட்டவர். அவர்கள் அனைவரும் தனிநபர்கள். அவர்கள் மக்களின் ஏதாவது ஒரு குழுவையோ, நாட்டின் பகுதியையோ பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அவ்வாறு தாஷ்கண்டில் சி.பி.ஐ. அமைக்கப்பட்ட விவரம் தாய் மண்ணான இந்தியாவிலிருந்த கட்சியினருக்கு 1950 வரை தெரிந்திருக்கவில்லை.

டிசம்பர் 26 1925




# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது அமைப்பு மாநாடு

**இந்த மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது மத்தியக் கமிட்டி உருவாக்கப்பட்டது. முதலாவது அமைப்பு விதிகளையும் மாநாடு உருவாக்கியது.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருக்கொள்வதற்கு முன்பே அதன் கழுத்து நெரிக்கப்பட்டது. 1924ம் ஆண்டில் மார்ச் மாதம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்குவதற்கு முன்பே கான்பூரில் ‘‘போல்ஷ்விக் சதி’’ என்று வழக்கு தொடுக்கப்பட்டது. இது தான் கான்பூர் சதி வழக்கு.

### கான்பூர் சதிவழக்கு

பிரிட்டிஷ் மன்னரின் அரசாளும் உரிமையைப் பறிக்க சதி, போல்ஷ்விக் உதவியோடு அரசியல் பயிற்சியும், ஆயுதப் பயிற்சியும் நடைபெறுதல் போன்ற காரணங்கள் கூறப்பட்டன. 1922–23 களில் பெஷாவர் சதி வழக்கின் போதும் இதே காரணங்கள் தான் கூறப்பட்டன.

‘‘சமுதாயம் பழமையின் நுகத்தடியில் அமுக்கப்பட்டு, கொடுமைகளுக்கு மக்கள் உள்ளாக்கப்பட்டால் மக்களின், உள்ஆற்றல் தட்டி எழுப்பப்பட்டு புரட்சி வெடிப்பது தவிர்க்க முடியாதது என்பது வரலாற்று உண்மை. இதில் நாங்கள் மக்களைத் தட்டி எழுப்பும் புரட்சியாளர்களாகச் செயல்பட்டது உண்மை’’

‘‘அடக்குமுறை ஆங்கிலேய அரசின் உரிமையானால் புரட்சி செய்வது புரட்சியாளர்களின் உரிமை’’

என்றுநீதி மன்றங்களில் கம்யூனிஸ்ட்டுகள் முழங்கினார்கள்.

1924ம் ஆண்டு மே மாதம் முடிந்தது. எஸ்.ஏ.உஸ்மானி, முசாபர் அகமது, குலாம் உசேன், நளினி தாஸ் குப்தா ஆகியோருக்கு 4 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. சிங்கார வேலருக்கு உடல் நிலை சரியில்லாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார். எம்.என்.ராய் தலைமறைவாகி விட்டார். பின்பு 1931ல் கைதாகி 12 ஆண்டுகள் தண்டனை பெற்று 6 ஆண்டுகளில் விடுதலையானார்.

கான்பூர் சதிவழக்கு இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி உருவாவதை இந்திய மக்களுக்கு எடுத்துக் காட்டியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாடு 1925ல் டிசம்பர் மாதம் 26ம் தேதி உத்திரபிரதேச மாநிலம் கான்பூரில் கூடியது.

### கொள்கைகள் உருவாக்கம்

‘‘கம்யூனிஸ்டுகள் நிலைமைகளைப் புரிந்து கொள்ளவில்லை. இந்தியப் பிரச்சனைகளை கம்யூனிஸ்டுகளால் தீர்க்க முடியாது. அவர்கள் ரஷ்யா, சீனா அடிப்படையைக் கடைப்பிடிப்பவர்கள். பொருளாதாரப் போராட்டத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பவர்கள். அனைத்திற்கும் அதுவே தீர்வு என்று வாதிடுவார்கள்.

மதம், சாதி, இனம், மொழி என்பவை கம்யூனிஸ்ட்களின் வேலைத் திட்டங்களில் இருந்ததில்லை. எனவே இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகள் வெற்றி பெற முடியாது’’.....

மார்க்சியம் விடுதலைக்கானதாக இருப்பினும் இனம் மற்றும் ஒடுக்குறை, சாதி, போன்ற வர்க்க மற்ற வடிவங்கள் பற்றி குறைபாடுகள் கொண்டதே’’..

கம்யூனிஸ்ட்டுகள் மீதும், மார்க்சியத்தின் மீதும் இவ்வாறு தொடர்ந்து எழுப்பப்பட்டு வரும் விமர்சனங்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது அமைப்பு மாநாடு தகுந்த பதிலடி கொடுத்துள்ளது !

இந்த முதலாவது அமைப்பு மாநாட்டிற்கு தலைமை ஏற்ற சிங்காரவேலர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது கொள்கை அறிக்கையை தனது தலைமை உரையாக அறிவித்தார்.

### கம்யூனிஸ்டுகளின் இறுதி லட்சியம்

- மூலதனத்தின் ஆதிக்கத்தை ஒழிப்பது,
- போர்கள் இல்லாமல் செய்வது,
- எல்லா நாடுகளையும் ஒன்று சேர்த்து ஒரு ஜனநாயக கூட்டுறவுப் படையை உருவாக்குவது
- இந்தியாவில் கம்யூனிஸ்ட்களின் உடனடி நோக்கம்
- இந்தியாவின் சாமான்ய மக்களின் விடுதலைக்காகப் போராடுவது
- தொழிலாளர், விவசாயிகள் மீதான ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டுவது
- அரசியலிலும், பொருளாதார வாழ்விலும் சாதிய வேறுபாடுகளை ஒழிப்பது ஆகும்.
- அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, சமூக விடுதலை என்ற முப்பெரும் லட்சியங்களே இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கடமை ஆகும்.

கம்யூனிஸ்ட் கட்சி நாட்டில் பல குழுக்களாகச் செயல்பட்டு கருக்கொண்ட காலம் தொட்டே இக்கொள்கைகள் உருவாகின.



### சிங்காரவேலரின் தலைமை உரை

சிங்காரவேலரின் தலைமை உரை அமெரிக்காவின் சுதந்திரக் கவிஞன் வால்ட் விட்மன் கவிதை வரிகளை மேற்கோள் காட்டித் துவங்குகிறது.

‘‘விடுதலைக்காக உயிர்ப்பலியானவர்களின் புதை குழியில் இருந்தே விடுதலைக்கான விதைகள் வளர்கின்றன’’ என்ற கம்பீரமான வரிகள் மூலம் புரட்சியாளர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

சிங்கார வேலரின் தலைமை உரை தொலை நோக்கான கம்யூனிஸ்ட் அரசியல் பார்வையை இந்தியத் தன்மையிலான மார்க்சிய வளர்ச்சியை துவக்கி வைத்தது.

‘‘தத்துவ ஞானிகள் உலகை வியாக்கியானம் செய்கின்றனர். ஆனால் அந்த உலகை மாற்றி அமைப்பது தான் நமது நோக்கம்‘‘ என்ற மார்க்சின் குறிக்கோளின் அடிப்படையில் இந்திய அரசியல், பொருளாதார சமூக நிலைமைகளுக்குப் பொருத்தமான வகையில் தேசிய இயக்கத்திற்கு கோரிக்கைகள் மற்றும் செயல்பாட்டுக்கான ஒரு வேலைத் திட்டத்தையும் மாநாடு முன் வைத்தது.

எங்கிருந்தோ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிறந்துவிடவில்லை. இந்திய நிலைகளில் உருவான வரலாற்றுக் கட்டாயமாகவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உருவானது. அடித்தளமிட்ட இந்த தினமே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்க நாளாக ஒன்றுபட்ட கட்சி ஒருமனதாக முடிவெடுத்தது.

டிசம்பர் 26 1925



அமீர் ஹைதர்கான்



பாஷ்யம்

# தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம்



சி.சுப்பிரமணியன்

**தேசவிடுதலை இயக்கம், பாட்டாளி வர்க்க இயக்கம், சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றோடு இணைந்த வகையில் தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் உருப்பெற்றது.**

1925 டிசம்பர் 26ல் கான்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டபோது, அந்த துவக்கத்திற்கு தலைமை தாங்கி, கொள்கை நிலையை வெளியிட்ட ம.சிங்காரவேலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்றாலும், அன்றைய சூழலில் தமிழ் நாட்டில் அமைப்பு ரீதியாக கட்சி உருவாகவில்லை.

1905ல் நடைபெற்ற முதலாவது ருஷ்யப் புரட்சியை பாரதி ஆதரித்தார். 1917ல் நடைபெற்ற சோலிசப் புரட்சியை பாரதி வரவேற்றார். தேச விடுதலை என்பதே 'சமரச சன்மார்க்கம் என்றார் தியாகச் செம்மல் சுப்பிரமணிய சிவா. 1920ல் திரு.வி.க. தனது நவசக்தி ஏட்டை துவங்கி, ஜனநாயகம், தொழிலாளர் நலன், பெண் விடுதலை, சாதி ஒழிப்பு, இந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கொண்ட சமதர்ம சன்மார்க்கத்தை லட்சியமாக பிரகடனப் படுத்தினார்.

முதலாம் உலகப் போர் முடிந்தவுடன் எம்.பி.டி. ஆச்சாரியா மாஸ்கோ சென்று லெனினைச் சந்தித்தார். 1921ல் சிங்கார வேலர் காந்திஜிக்கு பகிரங்கக் கடிதம் எழுதி, இந்திய விடுதலையின் லட்சியம் சமதர்மமாகவே இருக்க முடியும்' என பிரகடனப்படுத்தினார்.

1920களில் சமதர்மக் கருத்துக்களை சிங்காரவேலர், திரு.வி.க. சர்கரைச் செட்டியார், சுப்பிரமணிய சிவா போன்றோர் பரப்பினர். சமதர்மத்திற்கான தேடல் நிறைந்த காலம்.

1923 ஆம் ஆண்டு பாட்டாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைத் திருநாளான மேதினம் இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னையில் சிங்கார வேலரால் கொண்டாடப்பட்டது.

1924ம் ஆண்டு மாமேதை லெனின் மறைந்த போது சிங்கார வேலர் நடத்திய லேபர் கிஸான் கெசட்டில் அஞ்சலி செலுத்தியதோடு அஞ்சலி கட்டுரையையும் எழுதினார்.

1925ம் ஆண்டு கான்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் அமைப்பு நீதியாக உருவானது; ஆயினும் தமிழ்நாட்டில் கட்சி அமைப்பு உருவாகி விடவில்லை, அதற்காக 12 ஆண்டுகள் பாடுபட வேண்டியிருந்தது. கட்சி அமைப்பு உருவாகவும், அரசியல் கொள்கை வளரவும் சிங்காரவேலர் அயராது பாடுபட்டார்.

தந்தைப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தோடு சிங்காரவேலர் தீவிரமாகப் பணியாற்றினார். சிங்காரவேலர் – பெரியார் உறவு, பெரியாரை சமதர்மம் நோக்கி திருப்பியது. பெரியார் சோவியத் யூனியனுக்கு சென்று திரும்பியதன் விளைவாக சோசலிசக் கருத்துக்கள் மீது அவருக்கு மேலும் ஆர்வம் ஏற்பட்டது.

1932 டிசம்பரில் ஈரோட்டில் பெரியாரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சுயமரியாதை சமதர்மக் கட்சி என்ற அமைப்பை உருவாக்குவதற்கான திட்டத்தை சிங்காரவேலர் முன் மொழிந்தார். அது ஈரோட்டுத் திட்டம் என்று அழைக்கப்பட்டது.

இந்தியாவுக்கு முழு விடுதலை, தேசக் கடன்கள் முழுவதும் ரத்து, தொழில்சாலைகள், வங்கிகள், ரயில்வே ஆகியவை தேசியமயம், காடுகள் விவசாய நிலம் மக்களின் உரிமை, விவசாய கடன் ரத்து, ஏழு மணிநேர வேலை, சுதேச சமஸ்தானங்களை ஒழித்தல், இந்தியாவில் தொழிலாளர் விவசாயிகள் ஆட்சியை கொண்டு வருதல், இவைகள் தான் ஈரோட்டுத் திட்டம்' இத்திட்டத்தை விளக்கி தமிழகமெங்கும் சுயமரியாதை சமதர்ம மாநாடுகள் நடைபெற்றன. பெரியார், சிங்காரவேலர், ஜீவானந்தம் ஆகியோர் அயராது பாடுபட்டு தமிழகம் முழுவதும் சுயமரியாதை சமதர்ம இயக்கத்தின் கிளைகளை உருவாக்கினர்.



சுயமரியாதை இயக்கத்திற்குள் சமதர்மப் போக்கை விரும்பாதவர்கள் ஆங்கிலேயரின் ஆட்சியை பகைத்துக் கொள்ளாமல், சமூக சீர்திருத்தங்களை ஆதரித்தால் போதும் என்று பெரியாரை வலியுறுத்தி வந்தனர்.

பெரியார் கைது, பெரியாரின் நீதிக்கட்சி ஆதரவு, நீதிக் கட்சியின் வற்புறுத்தல் இவைகளால் பெரியார் ஈரோட்டுத் திட்டத்தை கைவிட்டார். 1936 பிப்ரவரியில் திருத்துறைப்பூண்டியில், கூடிய மாநாட்டில் உருவான சுயமரியாதை சமதர்ம கட்சி 1936 நவம்பரில் திருச்சியில் கூடிய மாநாட்டில் கலைக்கப்பட்டு, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியுடன் இணைவது என்று முடிவெடுக்கப்பட்டது.

1934ல் தடைசெய்யப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமறைவாக செயல்பட்டு கொண்டு இருந்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்து பணியாற்றுவது என முடிவு செய்தது.

1934ல் ஜூலை மாதம் ஹைதர்கான் தலைமறைவாக சென்னைக்கு வந்து கட்சியை அமைப்பு ரீதியாகக் கட்டினார்.

**சென்னை ஜார்ஜ் கோட்டையில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை இரவோடு இரவாக இறக்கிவிட்டு தேசியக் கொடியை ஏற்றிய பாஷ்யம் என்ற ஆர்யாவும் அமிர்ஹைதர் ஹானுடன் தொடர்பு கொண்டார். இவர்தான் சென்னை நகரத்தில் கட்சிக்கு முதல் செயலாளராக இருந்தார்.**

சென்னையில் தங்கியிருந்த தோழர் சுந்தரையா பாண்டிச்சேரி, வ.சுப்பையா ஆகியோருடன் அமீர் ஹைதர்கான் தொடர்பு கொண்டார்.

1936 ல் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் ஜீவா, சீனிவாசராவ், பி.ராமமூர்த்தி, எ.எஸ்.கே.அய்யங்கார், கே.முருகேசன், இளங்கோ போன்றோர் செயலாற்றினார்.

1936ம் பம்பாயிலிருந்து எஸ்.வி.காட்டே நாடு கடத்தப்பட்டு சென்னைக்கு வந்தார். இவரும் தமிழ்நாட்டில் கட்சி அமைப்பை உருவாக்க வழி காட்டினார். இவரின் வழிகாட்டுதல்களின் கீழ் பி.சீனிவாசராவ், ப.ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, சி.எஸ். சுப்பிரமணியம், ஏ.எஸ்.கே.அய்யங்கார், கே.முருகேசன் ஆகிய தலைவர்கள் பணியாற்றினர். இவர்கள் பங்கேற்ற அமைப்பு கம்யூனிஸ்ட் ''செல்'' என்று அழைக் கப்பட்டது. இதற்கு செயலாளர் என்று யாரும் கிடையாது. கூட்ட நிகழ்ச்சிகளை பதிவேடு எழுதுபவரே செயலாளராக கருதப்பட்டார். தோழர் சி.சுப்பிரமணியம் இந்தப் பணியை செய்ததால் அவரே செயலாளராக இருந்தார்.

1936ம் ஆண்டு விவசாய சங்கம் உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில் சென்னை மாணவர் சங்கமும் துவக்கப்பட்டது. 1937ல் ஜனசக்தி துவங்கப்பட்டது.

1936–38ம் ஆண்டுகளில் தமிழகத்தில் கட்சியின் கட்டமைப்பு அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டு விட்டது. பல துறைகளில் கட்சி செயல்பட ஆரம்பித்தது. தொழிலாளர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம், மாணவர்கள் போராட்டம் என பல நிலைகளில் போராட்டங்கள் நடைபெற்றன.

1938 ம் ஆண்டு இங்கிலாந்தில் கல்வி பயின்று கொண்டிருந்த மோகன் குமாரமங்கலம், சி.எஸ் சுப்பிரமணியம் ஆகியோர் கம்யூனிஸ்ட்களுடன் இணைந்து இயக்க வேலைகளைத் தீவிரப்படுத்தினர். அப்போது அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்டம் படித்த சுப்பிரமணிய சர்மாவும், பி.ராமமூர்த்தியும் கட்சியில் இணைந்து செயலாற்றினர்.

1939 கட்சி மீது தடை விதிக்கப்பட்ட போதும் கட்சியின் வெகு ஜனப் போராட்டங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை. தமிழகத்தில் இனியும் கட்சியை வளரவிடாமல் தடுக்கும் நோக்கோடு 1940–41 சென்னை சதிவழக்கு போடப்பட்டது. இதைத் தொடர்ந்து கோவை சதி வழக்கு, நெல்லை சதிவழக்கு என்று பலப்பல சதி வழக்குகள் தொடர்ந்தது.

டிசம்பர் 26 1925

கட்சிக் கடிதம்

# நூற்றாண்டை நோக்கி!



### பேரன்புமிக்க தோழர்களே!

நாம் அங்கம் வகித்து வரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு விழாவை காண உள்ளது. நூற்றாண்டு விழாவை கோலாகலத்துடன் கொண்டாடி மகிழ, அதற்குரிய நாள் வெகு தூரத்தில் இல்லை; கூப்பிட்ட தொலைவில் தான் உள்ளது.

ஆம் – இவ்வாண்டு டிசம்பர் 26ஆம் நாள் நமது கட்சி 96 ஆண்டுகளை நிறைவு செய்து 97 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

கடந்த 96 ஆண்டுகால வரலாற்றை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். கடந்த 96 ஆண்டுகளில் நமது கட்சி உலகத் தின் அமைதிக்காக, நாட்டின் விடுதலைக்காக, சமூக அடக்கு முறைகளுக்கு எதிராக, தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என அனைத்து பகுதி மக்களுக்காகவும் களம் கண்டோம்!

களம் காண நேரிட்ட போது அவைகள் அடையாளத்திற்கான இயக்கமாக நடைபெறவில்லை.

மாறாக முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் இடைவிடாது போராடினோம்.

அத்தகைய இயக்கங்களில் நாம் செய்திட்ட தியாகங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

சிறைக் கொடுமை முதல் துப்பாக்கிச் சூடு வரை எதிர் கொண்டோம். நமது மதிப்புமிக்க தோழர்களின் விலைமதிக்க முடியாத உயிர்கள் பலியானது. சிறைச்சாலைகளும், சித்திரவதைகளும் எண்ணி மாலா. இத்தகைய தியாகங்களினால் அடைந்திட்ட வெற்றிகள் ஏராளம், ஏராளம். சமூக அடக்குமுறை கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தோம்!

தொழிலாளர்களுக்குரிய சட்டங்களை, உரிமைகளைப் பெற்றுத் தந்தோம்!

நாடு முழுவதும் நிலக் குவியல் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்திட, நிலசீர்திருத்த சட்டங்களை அரசுகள் நிறைவேற்றிட, அதன் மூலம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் கிடைத்திட, கிராமப்புறங்களில் நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் அகற்றி, ஜனநாயகம் தழைக்க போராடி வெற்றி பெற்றோம்!

குத்தகை விவசாயிகளை பாதுகாக்க, குத்தகை பதிவுச் சட்டம் கொண்டுவர போராடி வெற்றி பெற்றோம். குடியிருப்பு மனை சொந்தமாக்கிட இடைவிடாத போராட்டங்களின் வாயிலாக சட்டம் கொண்டுவர செய்தோம். குடியிருக்க மனை கொடு, வீடு கட்ட பணம் கொடு என்கிற முழக்கத்தை முன்வைத்து போராடியதன் விளைவாக அரசுகள் தொகுப்பு வீடுகள் கட்ட வேண்டிய நிலையை உருவாக்கி வெற்றி பெற்றோம்.

அனைவருக்கும் கல்வி, கற்றவர்களுக்கு வேலை அல்லது வேலையில்லா கால நிவாரணம் என்ற முழக்கத்தை முன்வைத்து போராடினோம், வெற்றி பெற்றோம். பதினெட்டு வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற முழக்கத்தை முன்வைத்து வெற்றி பெற்றோம். இயற்கை சீற்றங்களால் மக்களும், விவசாயிகளும் பாதிக்கப்பட்ட போது நிவாரணம் வேண்டும் என்ற முழக்கத்தை முன்வைத்து போராடியதன் காரணமாக பயிர் காப்பீட்டுத் திட்டத்தைப் பெற்றோம்.

போராடியது மட்டுமல்ல, தியாகம் செய்தது மட்டுமல்ல, வெற்றிமேல் வெற்றி என்று வெற்றிகளையும் பெற்றோம். நடத்திட வேண்டிய இயக்கங்களும், பெறவேண்டிய வெற்றிகளும் ஏராளமாய் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. அவைகளைப் பெற்றிட, போராட வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். அதற்கான போராட்டங்களை திட்டமிட, நிறைவேற்றிட தொடர்ந்து களம் காண்போம்.

நாட்டின் விடுதலைப் போரில் எள் முனையளவு கூட பங்கேற் காத ஒரு கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருக்கிறது என்பது மட்டுமல்ல, நாட்டையே திசை மாற்றம் செய்திட, வகுப்புவாத வெறியை தூண்டி தங்களின் மிகக் குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக வகுப்புவாத சக்திகள் படமெடுத்து ஆடிக் கொண்டுள்ளது.

நாட்டை கபளீகரம் செய்யத் துணிந்திட்ட நாசகார சக்திகள் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி பேயாட்டம் ஆடிக் கொண்டுள்ளது. ஜார் மன்னர் ஆட்சியில் இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால் வனவாசம் என முண்டாசுக் கவிஞன் பாரதி பாடியது போன்று, இன்று மோடியின் மோசடி ஆட்சி நடைபெற்று வருகின்றது. கருத்துச் சுதந்திரத்தை காலில் போட்டு மிதிக்கின்றது.

போராடிப் பெற்ற உரிமைகளும், சட்டங்களும் பறிபோய் கொண்டுள்ளன. பொதுச் சொத்துக்கள் அனைத்தும் தனிச் சொத்தாக மாற்றிக் கொண்டுள்ளது. கல்வி எட்டாக்கனியாகி விடுமோ என்ற கவலை ஏற்படுகின்றது. தலித் மக்களும், பழங்குடி மக்களும், பெண்களும், சிறுபான்மை மக்களும் அச்சத்துடன் வாழ வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நிதி ஒதுக்கீடுகள் ஏழைகளுக்கு அல்ல – மாறாக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு என தீர்மானகரமாக முடிவு எடுக்கப்படுகின்றது. இவைகளையெல்லாம் நாம் கணக்கில் கொண்டு எதிர்காலத்திற்கான பணிகளுக்கு திட்டமிடவேண்டும். கட்சி தொடங்கப் பெற்ற டிசம்பர் 26ஆம் நாள் கட்சிக் கிளைகள் தோறும் செங்கொடியேற்றி இனிப்பு வழங்கி கொண் டாடி மகிழ்வதுடன்...

ஜனசக்தி சிறப்பிதழை மக்களிடம் கொண்டு செல்லவும், ஜனசக்தி காலண்டரை கொண்டு செல்லவும் ஆயத்தமாவீர்!

நூற்றாண்டு நெருங்கிவரும் நிலையில் மக்களின் பேரியக்கமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மேலோங்க, இந்நாளில் சபதம் ஏற்போம்! வணக்கம்.

தோழமைமிக்க

**இரா.முத்தரசன்**

---



அமீர் ஹைதர்கானுடன் சலீம்

டிசம்பர் 26 1925

**– அ.மு.சலீம்**

# அமீர் ஹைதர்கானைக் ... கண்டேன்

1988 ஆம் ஆண்டு தொடக்க மாதங்களின் ஒரு நாளில், தலைநகர் புதுடில்லிக்கு முதன்முதலாக செல்லும் வாய்ப்பு கிடைத்தது. புதுச்சேரி கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்பெற்ற தலைவர்களில் ஒருவரான, டாக்டர் என்.ரங்கநாதன் அவர்கள்தான் என்னை டில்லிக்கு அழைத்துச் சென்றார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகமான அஜய்பவனுக்கும் அழைத்து சென்றார்.

அங்கே.... ஒரு வயதான வெண் நரைகளுடன், பைஜமா – குர்தா வில் இருந்த ஒரு கிழவரைக் காண்பித்து அவருடன் என்னை நிற்க வைத்து அவர் வைத்திருந்த கேமிரா மூலம் புகைப்படங்களை எடுத்தார். யார் இந்த வயதான கிழவர்... நம் கட்சியின் மூத்த தலைவரா? என்று கேட்டேன். இவரை உனக்கு தெரியாதா? இவரைப் பற்றி நீ அறிந்திருக்கவில்லையா? இவர் தான் அமீர்ஹைதர்கான் என்றார். உண்மையிலேயே அப்போது அவரைப் பற்றி எனக்கு தெரியாத காரணத்தினால், நானும் சாதாரணமாக எடுத்துக் கொண்டேன்.



### அமீர்ஹைதர்கான் யார்?

1900களில் தற்போது பாகிஸ்தானில் உள்ள ராவல் பிண்டிக்கு அருகே ஜீலம் நதிக்கரையில் உள்ள அழகான ஒரு கிராமத்தில் பிறந்தவர் அமீர்ஹைதர்கான்.

1913 –14களில் சொந்த ஊரைவிட்டு புறப்பட்டு கல்கத்தா மாநகருக்கு வருகிறார். கப்பலில் வேலையாளாக சேருகிறார். படிப்படியாக உயர்ந்து கப்பல் மாலுமியாக பொறுப்பேற்று, ஜப்பான் – சீனா (ஹாங்காங்) நாடுகளுக்கு சென்று... 1918ல் அமெரிக்காவிற்கு செல்கிறார். பல தொழில்நுட்ப பணிகளில் சேர்ந்து 1922–ல் விமான ஓட்டியாக பயிற்சி பெற்று கேப்டன் ஆகிறார். பணிபுரியும் இடங்களிலெல்லாம் வேலைப் பிரச்சனைகளுக்காக போராட்டம் செய்கிறார்.

1924ல் அமெரிக்காவில், இந்துஸ்தான் கதர் கட்சியுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அமெரிக்க கம்யூனிஸ்டு கட்சியில் சேர்கிறார்.

1926–ல் அமீர் ஹைதர்கான் மாஸ்கோவிற்கு கம்யூனிஸ்டுகளுக்கான கீழை நாட்டு பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற அனுப்பப்படுகிறார்.

சர்வதேச கம்யூனிஸ்ட் அமைப்பான கோமின்டார்ன் அமைப்பு அமீர் ஹைதர்கானை பயிற்சி கொடுத்து இந்தியாவிற்கு அனுப்புகின்றனர்.

1929ல் புகழ்பெற்ற மீரத் வழக்கில் தேடப்படுகிறார். பிடிவாரண்டிலிருந்து தப்பித்து, பம்பாய் கோவா வழியாக சென்னை வந்து, கப்பலேறி... மத்தியதரைக் கடல் வழியாக பிரான்ஸ் நாட்டின் மர்செய்ல்ஸ் நகருக்கு வந்து, ஜெர்மனியின் ஹாம்பர்க் துறைமுக நகருக்கு வந்து மாஸ்கோ வந்தடைகிறார். 1930 மீண்டும் மாஸ்கோவிலிருந்து புறப்பட்டு பம்பாய் திரும்புகிறார். அமீர்ஹைதர்கானின் இந்த திகிலூட்டும் ரகசிய பயண அனுபவங் களைப் நினைத்தால் ஜேம்ஸ்பாண்ட் திரைப்படக் காட்சிகள் போல் தோன்றும்.

1931–ல் கோமின்டார்ன் முடிவு அடிப்படையில், தென்இந்தியாவில் கம்யூனிஸ்டு கட்சியை உருவாக்குவதற்கு பம்பாயிலிருந்து சென்னைக்கு அனுப்பப்படுகிறார்.

### 1931 மார்ச், ஏப்ரலில் சென்னைக்கு வருகை

சென்னை ரயில் நிலைய தங்கும் விடுதியில் கோவா பயணி போல உடையணிந்து தங்கி, பிறகு திருவல்லிக்கேணியில் சங்கர் என்கிற பிராமண இளைஞராக தங்குகிறார். சில தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு இளம் தொழிலாளர் சங்கம் **(Young Workers League)** அமைப்பை ஏற்படுத்துகிறார். மார்க்சிய கருத்துகளை பரப்பி, புரட்சி கொள்கைகளை நோக்கி பல இளம் வாலிபர்களை ஈர்க்கிறார். 1. ருஷ்யா மாணிக்கம் 2. வி.கே.நரசிம்மன், 3. கே.பாஷ்யம் (ஆர்யா) 4. கம்மம்பாடி சத்யநாராயணா 5. பி.சுந்தரையா 6. வ.சுப்பையா, 7. பி.ராஜவேடிவேலு 8. ஜெயராமன் போன்றவர்களை உருவாக்குகிறார். தென்னிந்தியாவில் முதல் கம்யூனிஸ்டு அமைப்பு உருவாக்கப்படுவதற்கு அடித்தளம் அமைக்கிறார். கே.பாஷ்யம் (ஆர்யா) பெரிய புரட்சியாளராகிறார். சென்னை கோட்டையில் தேசிய கொடியை ஏற்றியவர். 1932 ஜனவரி 26–ல் 150 அடி உயரம் கொண்ட கொடி கம்பத்தில் கலங்கரை விளக்கத்தின் வெளிச்சத்திலிருந்து மறைந்து, மறைந்து ஏறி, தேசிய கொடியை ஏற்றிய தீரர். இவர் சிறந்த ஓவியர். இப்போது பிரபலமாக இருக்கும் மகாகவி பாரதியார் திருஉருவத்தை வரைந்தவர்.

வ.சுப்பையா அவர்கள் பின்னாளில், புதுச்சேரி புகழ்பெற்ற மக்கள் தலைவரானார். பிரெஞ்சிந்திய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து புதுச்சேரி மண்ணின் விடுதலை போராட்டத்தை தலைமையேற்று நடத்தி புதுச்சேரிக்கு விடுதலை பெற்று தந்தார். 1987களில் மத்திய ஒன்றிய அரசு அறிவித்த தலைசிறந்த தேச விடுதலை மாவீரர்கள் 92 பேர் பட்டியலில் புதுச்சேரியிலிருந்து அறிவிக்கப்பட்ட ஒரே தலைவர் தோழர் வ.சுப்பையா ஆவார்.

அரிஜன சேவா சங்கத்தின் செயலாளராகவும், காந்தியவாதியாகவும் இருந்த வ.சுப்பையா – அமீர்ஹைதர் கான் சந்திப்பிற்கு பிறகு, கம்யூனிஸ்டு புரட்சிப்பாதைக்கு திரும்பியதாக தெரிவிக்கிறார். அமீர் ஹைதர்கான், கம்யூனிஸ்டு அறிக்கை, தாய் நாவல், உலகை குலுக்கிய பத்து நாள் ஆகிய நூல்களை தனக்கு அளித்ததாக வ.சுப்பையா குறிப்பிடுகிறார்.

### நேதாஜிசுபாஷ்சந்திரபோஸைமாற்றியஅமீர்ஹைதர்கான்

1932 மே மாதத்தில் அமீர் ஹைதர்கான் கைது செய்யப்பட்டு சென்னை சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது சுபாஷ் சந்திர போஸூம் சென்னை சிறையிலிருந்தார். பல சமயங்களில் அமீர் ஹைதர்கானும், சுபாஷ் சந்திரபோஸூம் உரையாடுவார்கள். கடத்தி வரப்பட்ட மார்க்சிய நூல்களை சுபாஷ் சந்திர போஸூக்கு அளித்து, அவரை படிக்க வைத்து, மார்க்சிய கருத்துக்களை சுபாஷ் சந்திரபோஸிற்கு அறிமுகம் செய்கிறார்.

காங்கிரஸ் கடைப்பிடித்த கைராட்டை உதவாது, அக்டோபர் புரட்சி எனும் உதாரணம் மூலம் இந்திய சுதந்திர போராட்டம் நடத்தப்பட்ட வேண்டும் என்று அமீர் ஹைதர்கான் எடுத்துரைத்து, இந்த கருத்தை சுபாஷ் சந்திர போஃஸூம் ஏற்று இந்தியாவின் எதிர்காலம் என்று நூல் எழுதினார்.

### ஜவகர்லால் நேரு & அமீர் ஹைதர்கான் உரையாடல்கள்

இருவரும் 1938 ஏப்ரல் இரண்டாம் உலகப்போருக்கு ஒத்திகையாக ஸ்பெயினில் நடந்த பாசிச எதிர்ப்பு போராட்டத்தைப் பற்றி உரையாடினார்கள். அடுத்தமுறை சந்திக்கும் போது கதராடை உடுத்திய லேவா தேவிகாரர்களைப் பற்றி நேருவிடம் எச்சரித்தார். முதலில் நேரு இந்த கருத்தை ஏற்கவில்லை. பிறகு அமீர் ஹைதர்கான் சொல்வது சரி என்று நேரு ஒத்துக் கொண்டார்.

### ஹோ சி மின்

1930–ல்வியட்நாம் புரட்சி தலைவர் ஹோ சி மின், சீன கம்யூனிஸ்டு தலைவர் லியு ஷோ சி யும் மாஸ்கோ வந்திருக்கும்போது அமீர் ஹைதர்கானை சந்திக்கிறார்கள்.

### சிறைவாசம்

அமீர் ஹைதர்கான் தன் வாழ்நாளில் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைகளில் கழித்திருக்கிறார். பாகிஸ்தான், சென்னை, கோவா, சேலம், ராஜ மகேந்திர புரம் ஆகிய சிறைகளில் கடும் தண்டனை அனுபவித்திருக்கிறார். 1945ல் பாகிஸ்தான் ராவல் பிண்டி போய் சேருகிறார். 1948–1961 வரை பாகிஸ்தானில் சிறைவாசம் 1961லிருந்து ராவல் பிண்டியில் தான் பிறந்த கிராமத்தில் மாணவர்களுக்கு கல்வி அளிக்க பள்ளியை நிறுவி 10ஆம் வகுப்பு வரை பள்ளியை உயர்த்துகிறார். 1988 ஏப்ரல் இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி அழைப்பை ஏற்று டில்லி அஜய் பவனில் சில மாதங்கள் தங்குகிறார். மீண்டும் பாகிஸ்தானுக்கு திரும்பி தான் கட்டிய பள்ளி செயல்பாட்டிலேயே ஒன்றி விடுகிறார். ஒரு நாள் ஓடும் பேருந்து ஒன்றில் ஏற முயன்று கீழே தவறி விழுந்து கடுமையான தலைக்காயம் ஏற்பட்டது. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, கண் திறக்கிறார். ஆனால் உணர்வில்லை. மெல்ல, மெல்ல நாடித்துடிப்பு அடங்கியது. நம்ப முடியாத அளவிற்கு ஆனால் உண்மையான வீர தீர சாகசங்கள் நடத்திய மாபெரும் போல்ஷ்விக் புரட்சி வீரர் மறைந்தார்.

தொடர்புக்கு: **94433 89291**



டிசம்பர் 26 1925

– கே.சுப்பராயன் எம்.பி.



# அடக்குமுறை நெருப்பில் பூத்த செம்மலர்!

**இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சிக்கு 97 வயது ! இன்னும் மூன்று வருடங்களில் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் களை கட்டிவிடும்.கடந்த ஆண்டும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நூற்றாண்டு விழா மார்க்சிஸ்ட் கட்சியினரால் கொண்டாடப்பட்டது ! இந்நிலையில், இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா, 2024 டிசம்பரில் தொடங்கும் என்ற கருத்து குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும். இதில் குழப்பமடைய ஒன்றுமில்லை !**

1925ம் ஆண்டு தான் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டது என்று, ஒன்றுபட்ட கட்சியின் தேசியக் குழுவில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டு விட்டது ! 1964 ஏப்ரல் மாதம் கட்சியின் தேசியக்குழுக்கூட்டத்திலிருந்து 32 தோழர்கள் வெளியேறினர். அப்படி வெளியேறிய 32 பேரில் தோழர் பூபேஷ் குப்தா திரும்ப கட்சிக்கு வந்து விட்டார். தேசியக் குழுவின் பெரும்பான்மை முடிவை ஏற்க மறுத்து வெளி யேறி, புதிய கட்சி அமைப்பை உருவாக்கியது ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டிற்கு எதிரானதாகும்.

அதற்கு பின்னர் அந்த 32 தோழர்களும் இருந்து எடுத்த ஒன்றுபட்ட கட்சியின் முடிவை இன்று மீறி, 1920 ல் தான் கட்சி தொடங்கப்பட்டது என்று அறிவித்தனர்.அதனால், அவர்கள் 1920 ஐ கட்சி தொடங்கிய ஆண்டாக எடுத்து கொண்டனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று பட்டிருந்த போது எடுத்த முடிவில் உறுதியாக இன்று வரை நின்று கொண்டாடி வருகிறது. ஜனநாயக மத்தியத்துவக்கோட்பாட்டின் படி தேசிய குழுவின் முடிவை கட்சி உறுப்பினர்களும் அமைப்புக்களும் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளன .

ஏனெனில் , லெனின் வகுத்த கட்சி வாழ்க்கை நியதிகளை, கோட்பாடுகளை பற்றி நிற்கிற லெனினிஸ்ட் கட்சியான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அதை ஏற்று அமலாக்கி வருகிறது. அதே நேரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்திற்கான பின்புலமாக அதை மதிப்பீடு செய்தது.

இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம் அவ்வளவு எளிய ஒரு சம்பவமாக வரலாற்றில் ஏறிவிடவில்லை. உள்ளும் புறமும் அது சந்தித்த சவால்கள், தாக்குதல்கள் கொஞ்ச நஞ்சமல்ல ! ஒவ்வொன்றும் நெருப்புத்துண்டு நெஞ்சில் விழுந்த மாதிரி இடைவெளியின்றி விழுந்து கொண்டே இருந்தது.

புறத்தில், பிரிட்டானிய ஏகாதிபத்தியத்தின், காலனி ஆட்சியினரின் தாக்குதல்கள் குரூரமானவை, கொலை வெறி கொண்டவை.

இந்திய மண்ணில், கம்யூனிஸ்ட் இயக்கம் பிறப்பதற்கு முன்பே, அதை க ரு வ றை யிலேயே கருவறுத்து விட வேண்டுமெனக் கங்கணம் கட்டிக் கொண்டனர் .

1917 சோவியத் புரட்சி வெற்றி பெற்று உலகில் சோசலிச உதயம் தொடங்கிவிட்ட நேரம். அந்தப்புரட்சியின் ஒளிக்கீற்று இந்திய எல்லைக்குள் நுழைந்து விடாதவாறு தடுப்பதில் வெறிபிடித்தலைந்தது காலனி ஆட்சி .

தனிமனிதர்களின் அங்க அசைவுகளையும், மனப்போக்கையும் கூர்மையாக கண்காணித்து வேட்டை ஆடியது . பெஷாவர் சதிவழக்கு, லாகூர் சதி வழக்கு, கான்பூர் சதி வழக்கு, மீரட் சாதி வழக்கு என வழக்கு மேல் வழக்கைப் போட்டு அதிகாரத்திமிரெடுத்து ஆடியது பிரிட்டானிய போலீஸ்.

வேள்விப் பொருளாக நெருப்பில் பிறந்தவள் பாஞ்சாலி என்று மகாபராத இதிகாசகம் பேசுகிறது . இது கதை ! ஆனால், இந்திய அரசியல் வரலாற்றில் ''அடங்காது எரிந்த அடக்குமுறை நெருப்பில்'' பிறந்ததுதான் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி !

கவச குண்டலங்களோடு பிறந்தவன் கர்ணன் என்று மகாபாரதம் சொல்கிறது ! இதுவும் கதை தான். ஆனால், மனித இன வரலாற்றில், தகர்க்க முடியாத தத்துவ ஞானத்தோடும், அசைக்க முடியாத அமைப்பு நிலை செயல்பாட்டோடு கூடிய அர்ப்பணிப்பும் இணைந்து பிறந்த கட்சி தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி !

**கம்யூனிஸ்டுகளிடம் இருந்து தத்துவத்தையோ, அமைப்பு ரீதியான நடைமுறைகளையோ ஒருபோதும் பிரிக்க முடியாது.**

**உடலில் இருந்து உயிர் போனால் அது பிணம்! கம்யூனிஸ்டுகளிடமிருந்து தத்துவம் பிரிந்தால் அது நடமாடும் பிணம்! உடலுக்கு உயிர் போல் கம்யூனிஸ்டுகளுக்கு தத்துவ ஞானம் !**

1848 ல் ''கம்யூனிஸ்ட் லீக் '' என்ற பொதுவுடைமை புரட்சியாளர் அமைப்பிற்கான வேலைத்திட்டமாக மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரால் படைக்கப்பட்ட வரலாற்று ஆவணம் தான் ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை'' இந்த அறிக்கை சுரண்டும் கும்பலின், தாங்கள் உழைக்காமல் சமூகத்தின் உழைப்பை கபளீகரம் செய்து சொகுசாக வாழ்ந்த முதலாளித்துவத்தின் அடித்தளத்தையே அசைத்தது !

இந்த சின்னஞ்சிறு, ''அக்கினி குஞ்சை''க்கண்டு முதலாளிகள் நடுநடுங்கினார்கள் ! பல நூற்றாண்டுகளாக தொடரும் தங்கள் சுரண்டல் வேட்டைக்கு அந்திம காலம் தொடங்கி விட்டதாக அஞ்சினர் . இந்த 'அனல் வீச்சை ' தடுத்திட சகல ஆயுதங்களையும் பயன்படுத்தினர் , பயன்படுத்துகின்றனர், பயன்படுத்துவர் !



உலகெங்கும் சிதறிக்கிடக்கிற தொழிலாளி வர்க்கமே , ஒன்று சேருங்கள் ! உங்களைப் பிணைத்துள்ள அடிமைச்சங்கிலி அறுந்து விழட்டும் !

உங்களுக்காக பொன்னான உலகம் காத்திருக்கிறது ! என சிம்ம கர்ஜனை புரிந்து நம்பிக்கையூட்டியது கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை. சமூகத்தீமைகளை அழிக்கிற அந்தத்தீப்பொறி இந்தியாவை வந்தடைய 77 ஆண்டுகள் கழிந்தன.

ஏன் இந்தியாவை வந்தடைய இவ்வளவு காலதாமதம் ?

இது விரிவாகச் சொல்லப்பட வேண்டிய, ஆராயப்பட வேண்டிய ஒன்று தான். கம்யூனிசம் என்ற கருத்து, மார்க்சியத் தத்துவம் என்பது அன்னியச்சரக்கு என்று அந்நியர்கள் காலடிகளில் மன்னிப்புக் கேட்டு மண்டியிட்டுக் கிடந்த ஆர் எஸ் எஸ் கும்பலும் அதன் அறிவு ஜீவிகளும் சொல்லித் திரிகின்றனர். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றுதான் இந்த மண்ணும், மரபுகளும் முழங்கின !

அதற்கு ஒருபடி மேலே போய் ''உலகில் எல்லோருக்கும் உரியதாய் எது இருக்கிறதோ , அதுவே எனக்கும் உரியது !''

''பிறர் துன்பம் தீர்ந்தால்தான் எனக்கு இன்பம்'' என்று உலகம் இன்பகரமாக வாழ்ந்திட வாழ்நாளெல்லாம் துன்ப நெருப்பில் வாழ்ந்து மறைந்தார் காரல் மார்க்ஸ் !

அது அந்நிய சரக்கல்ல, முழு மொத்த மனிதகுலம் நெடுங்காலமாக கண்டு வந்த நற்கனவுகளுக்கு நடைமுறையில், நனவில் அவை நிறைவேறிட, கண் துஞ்சாது நனவிலே காரல் மார்க்ஸ் கண்ட கனவு தான் கம்யூனிசம் !

இது மனிதகுலத்தின் மகத்தான ஞானச்செல்வம் !

அதைத் தனது இலட்சியமாகக் கொண்டு, அதற்கான வழிகாட்டும் தத்துவமாக மார்க்சியத்தை தாங்கி நிற்கிற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் இந்தியப்படைப்பிரிவு !

தனது தத்துவஞான ஒளியில், தேசிய விடுதலை இயக்க காலம் முதல் இன்று வரை, இந்தியாவின் தலை மீது வலதுசாரி பிற்போக்கு ஆபத்து இருக்கிறது, என்று தொடர்ந்து எச்சரித்து வந்த கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி !

ஆனால் அன்று சிலர், ''அது வெறும் பிரமை, அப்படி எல்லாம் நடக்காது என்றனர்.

என்ன நடந்தது வரலாற்றில்? நடக்கக்கூடாத விபத்து நடந்தே விட்டது !

மகாத்மா காந்தி அடிகளை சுட்டுக்கொன்ற இந்துத்வா அதிகாரத்திற்கு வந்து விட்டது .!

1946 தேர்தலில், 1952 ல், 1957ல், 1962 ல் என ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குச்சதவிகிதம் ஏறுமுகமாகவே இருந்தது ! 1962 ல் 9.5 சதவிகித வாக்குகளைப்பெற்றது இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி.

ஆனால் இன்று ........

ஏன் இந்தப்பின்னடைவு ? காங்கிரசை எதிர்த்த மக்கட்பகுதி கம்யூனிஸ்ட் கட்சியை நோக்கி நகர்ந்தது 1962 வரை.

அதற்குப்பின் கட்சி இரண்டாகப்பிளந்தது, மக்கள் கம்யூனிஸ்டுகள் மீது நம்பிக்கை இழந்தார்கள், அதைலாவகமாக வடித்துக்கொண்டது வலதுசாரி பிற்போக்குக்கும்பல் !! வரலாறு மண்டையில் ஒரு கொட்டுக் கொட்டி பாடம் சொல்லிக்கொடுத்துள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு லெனினியக் கட்சி ! அனுபவம் தந்த பாடங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்து, அதற்கான பாதையில் முன்னேறும் ! சோசலிசமே வெல்லும் !



டிசம்பர் 26 1925

- சி.மகேந்திரன்



# பொதுவுடமை இயக்கமும், தமிழ் தென்றலும்

**இந்திய கம்யூனிஸ்டு கட்சி 1925 ஆண்டில் பிறந்தாலும், அது காங்கிரஸ் சோசலிச கட்சி என்னும் பெயருக்குள் இருந்துதான் சில காலம் செயல்பட்டு வந்தது. முற்றாக கம்யூனிஸ்டுகளை ஒழித்து முடிப்பது என்ற தீவிரத்திலிருந்த பிரிட்டிஷ் ஆட்சியில், இவ்வாறான யுத்திகளோடு செயல்படுவது கம்யூனிஸ்டுகளுக்கு தேவையாய் இருந்தது. ஜீவா, சீனிவாசராவ், ராம்மூர்த்தி முதலான தலைவர்கள் காங்கிரஸ் சோலிஸ்டுகள் கட்சியிலிருந்து செயல்பட்ட கம்யூனிஸ்டுகள்.**

'செல்' என்பது கம்யூனிஸ்டுகள் தங்கள் நுட்பமான செயல்பாட்டிற்கு என்று உருவாக்கிக் கொண்ட குழுக்கள். செல்கள் அமைத்து தமிழ்நாட்டின் பல பகுதிகளில் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த 'செல்கள்' உருக்கு போன்ற திறன் கொண்ட கட்சி அமைப்பை உருவாக்குவதில் முழு கவனம் எடுத்துக் கொண்டன. கட்சியின் வளர்ச்சிக்கு இதைப் போன்ற மற்றொரு செயல்பாடும் பெரும் பங்காற்றியது.

பல்வேறு துறைகளில் மக்களால் நன்கு அறியப்பட்ட சில தலைவர்கள் மாக்சீயமும், கம்யூனிசமும் தவிர்க்க முடியாமல் இந்த மண்ணில் வெற்றி பெற்றே தீரும் என்ற நம்பிக்கை முழக்கத்தை முன் வைத்து, செயல்பட்டு வந்தார்கள். ஒரு காலத்தில் கட்சிக்கு வெளியே இவர்கள் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. இவர்கள் 'செல்' என்னும் அமைப்புக்குள்ளிருந்து கட்சி வளர்ச்சியில் பங்கெடுத்தவர்கள் இல்லை. அவர்களில் முக்கியமானவர் திரு.வி.க அவர்கள்.

திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார் என்பதன் சுருக்கம் தான் திரு.வி.க. தமிழ் இலக்கியம், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளில் ஈடுபாடு கொண்டு பல சிறந்த நூல்களை எழுதிய தனித்துவம் மிக்க அறிஞர். அனைவராலும் அறியப்பட்ட மேடை சொற்பொழிவாளர்.

ஆனால் மறுபக்கத்தில் அவர் ஒரு தலைசிறந்த போராளி, தமிழ்த் தென்றல் என்று அழைக்கப்பட்ட திரு.வி.க.விடம் பொதுவுடமைக் கொள்கையின் மீது மாறாத ஈடுபாடுக் கொண்ட புயல் நிகர் செயல் வேகமும் இருந்தது. தொழிற் சங்க செயல்பாடுகளில் ஈடுபட்டதன் மூலம் இவர் மார்க்சீயத்தைக் கற்றறிந்து, பொதுவுடைமை கொள்கைகள் மீது தனித்துவமான ஆர்வத்தைக் கொண்டிருந்தார். பூவுலகின் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்த்து வைக்கும் வலிமை மார்க்சீயத்திற்கு உண்டு என்பதை மனப்பூர்வமாக நம்பினார்.

மார்க்கீசியம், கம்யூனிசம் பற்றி இவர் எழுத்துக்கள் மூலம் பகிர்ந்து கொண்டவை, வாசிப்புக்கு ஆர்வம் ஊட்டுவதாக அமைந்துள்ளன. இன்று வெகுமக்கள் தன்மை கொண்ட, மிகவும் பரந்துபட்ட மக்கள் அணியைக் கட்டி அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கம்யூனிஸ்டு கட்சிக்கு இந்த அனுபவம் மிகமிக அவசியமாக தேவைப்படுகிறது.

ஆங்கிலேயேர் காலத்தில் இந்தியாவில் முதன் முதலில் சென்னையில் அமைக்கப்பட்ட பெரிய வணிக நிறுவனம் தான் ஸ்பென்சர். இது இன்று ஸ்பென்சர் பிளாசா என்று அழைக்கப்படுகிறது. தெற்கு ஆசிய நாடுகளிலேயே மிக பிரமாண்டம் கொண்டதாக இது அமைந்திருந்தது. 1885 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இது, 80 தனித்தனியான விற்பனை கடைகளைகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. இதன் உரிமையாளர் பிரிட்டனை சேர்ந்த ஸ்பென்சர் அண்டு கோ என்னும் பிரிட்டிஷ் நிறுவனம். திரு.வி.க இங்குதான் முதலில் பணியில் சேர்ந்தார். தனக்கு கிடைப்பதற்கு அரிய அரசியல் ஒன்று இங்குதான் கிடைத்ததாக திரு.வி.க அவர்களே குறிப்பிடுகின்றார்.

பிரிட்டன் தொழிற் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கீர் ஹார்டி என்பவர். இவர் கம்யூனிஸ்டுக் கொள்கைகள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பதில் அக்கறைக் கொண்டவர். அரசியல் நிலமைகளை ஆய்வு செய்வதற்கு இந்தியா வந்த இவர் சில காலம் சென்னையில் தங்கியிருக்கிறார். அப்பொழுது எதிர்பாராமல் திரு.வி.க. ஹார்டியை சந்திக்கிறார். இதன் மூலம் மார்க்ஸ் பற்றியும், சமத்துவ உணர்வுகள் பற்றியும் அவரிடமிருந்து தெரிந்து கொண்டேன் என்கிறார் திரு.வி.க. இது 1908 ஆண்டு.

வங்காளப் பிரிவினையை ஒட்டி எழுந்த சுதேசி இயக்கம் 1906 முதல் 1911 வரை வீறு கொண்டு எழுந்தது. வந்தே மாதரம் என்னும் இதழ் 1905 ஆண்டு விபின் சந்திரரால் நிறுவப்பட்டு, அரவிந்தரை ஆசிரியராக் கொண்டு செயல்பட்டு வந்தது. விபின சந்திரபாலா சென்னை வந்து கடற்கரையில் ஆவேச உரை நிகழ்த்தினார். இது இந்த மாகாணத்தையே தட்டி எழுப்பியது. அந்தக் கூட்டத்திற்கு திரு.வி.க.வும் சென்றிருந்தார். அந்த நாட்களில் 'வந்தே மாதரம்' பத்திரிகையை இவர் வரவழைத்தார்.

ஸ்பென்சரில் பலர் முன்னிலையில் பத்திரிகையை இவர் வாசிப்பார். உடன் பணி புரியும் ஊழியர்க்குச் செய்திகளை விளக்கியுரைப்பார். இது அந்த நிறுவனத்தில் செயல்பட்டு வந்த பல ஆங்கிலேயருக்கு இந்த செயல் விருப்பம் அற்றதாக இருந்தது. வந்தே மாதரப் பிரசாரகன் என்று இவர் மேல் முத்திரை குத்தப்பட்டது. மேனஜிங் டைரக்டர் ஒருநாள் நேரில் அழைத்து எச்சாரிக்கை செய்தார்.

திரு.வி.க. இது தமது உரிமை இதை யாராலும் தடுக்க முடியாது என்று கூறி விட்டு, வேலையை ராஜினாமாச் செய்து விட்டார்.

இதைப் போலவே, செல்வபதி சந்திப்பு. திரு.வி.கவின் வாழ்க்கையில் அமைந்த மற்றொரு நிகழ்வு. சூளை பட்டாளத்திலுள்ள வேங்கடேச குணாமிர்த வர்ஷிணி சபை காரியதரிசி இவர். சபை சமய சொற்பொழிவு அரங்கம் என்ற நிலையிலிருந்து, தொழிலாளர்கள் நலனில் அக்கறை என்ற புதிய எல்லையில் அடியெடுத்து வைத்திருந்தது. அந்த சபையில் பேசுவதற்கு திரு.வி.க. செல்வபதியால் அழைக்கப்பட்டிருந்தார். இதுவே திரு.வி.க தொழிலாளர் இயக்கத்தில் அடியெடுத்து வைக்க அடிப்படையாக அமைந்தது.

திரு.வி.க ஒரு தேர்ந்த பத்திரிக்கையாளர். 1917 ஆண்டு முதல் 30 மாதங்கள் தேசபக்தன் என்னும் இதழாசிரியாக பொறுப் பேற்றிருந்தார். மிக தீவிரமான கட்டுரைகள் பத்திரிக்கையில் வெளி வந்தன. 1918 ஆம் ஆண்டின் அச்சுத் சட்டத்தின் கீழ் பத்திரிகைகள் மீது அரசு அடக்மறையை ஏவியது. 300 அச்சகங்கள் மீதும் 350 பத்திரிகைகள் மீதும் அபராதம் விதிக்கப்பட்டது. சுமார் 500 பிரசுரங்கள் தடை செய்யப்பட்டன. 200 அச்சகங்கள் மற்றும் 190 பத்திரிகைகளிடம் மொத்தம் ரூ.10 லட்சம் ரொக்கப்பணம் கோரப்பட்டது. இதில் ரூ.2 முதல் 3 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. திரு.வி.க. ஆசிரியர் பொறுப்பில் செயல்பட்ட தேசபக்தன் இதழும் தடைசெய்யப்பட்டது.

இந்த பின்னணியில் இந்திய சுதந்திரப் போராட்டத்தை விழிப்புணர்வு கொண்ட தொழிலாளர்கள் முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கில் 1918 ஆண்டில் உருவாக்கப்பட்டது தான் 'சென்னை தொழிலாளர் சங்கம்'. இதில் எஸ். எம். தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், அலுமினிய தொழிலாளர் சங்கம், போலீசார் சங்கம் ஆகியவை இடம் பெற்றன. போலீஸார் சங்கத் தலைவர் இந்து பத்திரிக்கையின் கஸ்தூரி அய்யங்கார்.

தொடர்ந்து மார்க்சீயத்தைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம் திரு.வி.க. விடம் பெருகியது. 1919 டிசம்பரில் திலகர் சென்னைக்கு வருகை செய்தார். கடற்கரைக் கூட்டத்திலும் தொழிலாளார் கூட்டத்திலும் சொற்பொழிவாற்றினார். "தொழி லாளார் அமைப்புக்களின் செயலாற்றும் சக்தியும் செல்வாக்கும் நாளடைவில் மேலும் மேலும் அதிகாரிக்கத் தொடங்கி விட்டது. தொழிலாளர்கள் தான் ஆட்சியாளர்கள் ஆகப்போகிறார்கள்" என்று திலகர் தீர்க்க தரிசனமாகக் அந்தக் கூட்டத்தில் அறிவித்தார்.

பொதுக் கூட்டம் நடைபெற்ற அந்த இரவில், திலகருடன் உரையாடல் செய்த திரு.வி.க. மார்க்சியம் பற்றி எழுப்பிய வினா முக்கியமானது. "மார்க்சியம் மீது இந்தியா நாட்டம் செலுத்தும் காலம் வரும் வாய்புள்ளது. இந்தியா எதையும் தனது இயற்கை ஆக்கியே ஏற்கும் பண்புடையது. அதற்குள் மார்க்சியம் இந்த மண்ணுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். என்று திலகர் பதில் கூறியதாக திரு.வி.க. தனது குறிப்பு ஒன்றில் எழுதியுள்ளார்.

மார்க்சீசம், கம்யூனிசம் பற்றி அறிந்து கொள்வதில் சிங்காரவேலர், சக்கரை செடியார் உதவி செய்ததைப் பற்றியும் மிகுந்த நன்றி உணர்வுடன் குறிப்பிட்டு சொல்லுகிறார் திரு.வி.க. மார்க்சியம் பற்றி தெளிவாக அறிந்து கொள்ள இவருக்கு சிங்காரவேலர் கூடுதல் கவனமெடுத்து உதவி செய்திருக்கிறார்.

"மார்க்சீயம் இந்தியாவுக்கு அந்நியம், தேவைப்படாதது, என்பது போன்ற கருத்துக்கள் எழுந்த நேரத்தில் அது இந்தியாவுக்கு ஆக்கம் தந்து, பயன் அளிக்கும் தத்துவம். அதை அப்படியே காப்பியடித்து பிரயோகம் செய்யாமல் இந்திய நிலைமைகளுக்கு ஏற்பச் செப்பம் செய்து கொள்ளவேண்டும் என்ற கொள்கையை தெளிவாக முன் வைத்தவர் திரு.வி.க.

**மார்க்சியத்தை தமிழ் வழி நின்று யோசித்தவர் தமிழ் தென்றல் திரு.வி.க. அவர்கள். டார்வினுடைய பாரிணாம தத்துவத்தை, திரு.வி.க. கூர்தல் அறம் என்று சுட்டிக் காட்டுகிறார். கூர்தல் என்று இவர் பயன்படுத்திய செந்தமிழ் சொல் நம்மை யோசிக்க வைக்கிறது.**

"கூர்தல் அறம் உலகை சிந்திக்க வைக்கிறது. உலக மாற்றத்தை இயற்கை வழி நின்று சிந்திக்க தூண்டுகிறது. டார்வின் ஆராய்ச்சியில் கூர்தல் அறத்தை முதன் முதல் எனக்கு அறிவுறுத்தியவர் சிங்காரவேலு செட்டியார்" என்பதையும் திரு.வி.க. குறிப்பிடுகிறார்.

டார்வின் உயிர் இனங்களின் பரிணாம வளர்ச்சி விதியினை எவ்வாறு கண்டுபிடித்தாரோ அவ்வாறே மார்க்சும் மானுட வரலாற்றின் வளர்ச்சி விதியினைக் கண்டு பிடித்தார் என்று மார்க்சின் சக தோழரான எங்கெல்ஸ் சொன்னதை மேற்கோள் காட்டி, இது மானுட விடுதலைக்கான கண்டுபிடிப்பு என்று வியந்து பேசகிறார்.

ஐரோப்பாவில் சக்தி வாய்ந்த சில வல்லரசு சக்திகள் உள்ளன. அதைவிட மற்றும் ஒரு மாபெரும் சக்தியும் இருக்கிறது. அது எல்லாவற்றையும் நடுங்க வைக்கும் திறன் கொண்டது. அதன் பெயர் தொழிலாளி வர்க்கம்.

அது மக்கள் துணை கொண்டு, இப்பொழுது புரட்சிக்கு தயார் நிலையில் இருக்கிறது. உரிய காலம் வரும்போது அது பொங்கி எழும் என்று 1854 ஆண்டில் மார்க்ஸ் எழுதியதை திரு.வி.க. மிண்டும் மீண்டும் குறிப்பிட்டு புரட்சிகர மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்கிறார்.

முதலாளித்துவம், ஏகாதிபத்தியமாக மாறும் காலத்தில் ஏற்படும் தீமையை லெனின் சிந்தித்தார். இதை

>> தொடர்ச்சி 25ம் பக்கம்



டிசம்பர் 26 1925

- மு.வீரபாண்டியன்

## ஆசிய - ஆப்பிரிக்க நாடுகளுக்கு

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 'அரசியல் பங்களிப்பு'



**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டை நெருங்குகிறது. தனது 96 ஆண்டுகால அரசியல் வாழ்வில் அதன் அரசியல் பங்களிப்புகள் மகத்தானவை.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாபெரும் அக்டோபர் புரட்சியால் உந்தப்பட்டது. இந்திய விடுதலைப் போரில் தோற்றம் கொண்டது. விடுதலைக்குப் போராடியதோடு, பின் தேச நிர்மாணப் பணிகளில் ஒத்துழைத்து நின்றது.

பன்முகம், மதச்சார்பின்மை, நாடாளுமன்ற ஜனநாயகம், பல கட்சி முறைமை – சட்டத்தின் ஆட்சி முறை, மொழிவழி மாநிலங்கள், மாநில உரிமைகள், ஜனநாயகம், சோசலிசம் எனும் மகத்தான விழுமியங்களுக்காக அது எப்போதும் போராடி வந்துள்ளது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் எனும் லெனினிய வகை அரசியலை அதுபற்றி நிற்பதால், புவியில் எப்போதும் அது விடுதலையின் பக்கமும், உழைக்கும் மக்களின் உரிமைகளின் பக்கமும் நின்றுள்ளது.

குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்காவில் 1925 க்குப் பின் நிகழ்ந்தேறிய அனைத்து நாடுகளின் விடுதலைப் போரையும் கட்சி ஆதரித்து வந்துள்ளது.

தலைமறைவு காலங்களில் கூட கட்சி சர்வதேசியத்திற்காக உரத்த குரல் எழுப்பி வந்துள்ளது/

1947–ல் பாகிஸ்தான் உருவான போது, வரலாறு காணாத பதற்ற சூழலிலும்கூட கட்சி இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் சிறுபான்மை மக்களுக்காக குரல் எழுப்பியது.

ஜாம்சாகி போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்கள், இந்திய – பாகிஸ்தான் நல்லுறவுக்கு தொடர்ந்து குரல் எழுப்பினார்கள். அவர் கைது செய்யப்பட்டு சிறைபடுத்தப்பட்டார். நிச்சயமற்ற சூழலில் அவரின் விடுதலைக்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற முற்றுகைப் போர் நடத்தியது. தொடர்ந்து ராணுவ தீர்வுக்கு எதிராக அரசியல் தீர்வை கட்சி முன் மொழிகிறது.

1948–ல் ஸ்ரீலங்கா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்றது. ஸ்ரீலங்கா விடுதலைக்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பல்வேறு தருணங்களில் குரலெழுப்பி வந்துள்ளது. குணசேகரா, டி சில்வா, பீட்டர் கெனமன், சிவத்தம்பி உள்ளிட்ட இலங்கை இடதுசாரி தலைவர்களோடும் தொடர்ந்து நட்புறவை பேணி வந்துள்ளது.

1956–ல் சிங்களர் மட்டும் எனும் சட்டத்தைக் கைவிட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரியது.

1958 இனக் கலவரத்தை கட்சி கண்டித்தது.

1972 புதிய அரசியல் சட்டத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப் பட்டதை கட்சி கண்டித்தது

1987 இலங்கை சமாதான ஒப்பந்தத்தை கட்சி வரவேற்றது.

விடுதலைப்புலிகள் – அரசு – நார்வே பேச்சுவார்த்தையை கட்சி ஆதரித்தது.

ஹைதராபாத் கட்சி காங்கிரஸில் இலங்கை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைத்ததோடு, ஒரு நாடு தழுவிய உண்ணாவிரத அறப்போராட்டத்துக்கும் கட்சி அறைகூவல் விடுத்து இயக்கத்தையும் மேற்கொண்டது.

டிககார்சிய தீவை அமைதி மண்டலமாகவும், திரிகோணமலையில் சென்டர்காம் எனும் அமெரிக்க ராணுவ தளத்தையும், "வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா" தொலைத் தொடர்பு சாதனங்கள் நிறுவுவதையும் கட்சி கண்டித்தது.

நேபாளம் மன்னர் ஆட்சியிலும், பிரிட்டிஷ் ஆட்சியிலும் அல்லல் பட்டது.

1945–ல் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுவிக்கப் பட்டது. அன்று முதல் இன்று வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நட்புறவை பேணி வருகிறது.

1950 முதல் 1960 வரை ஜனநாயக இயக்கம்.

1996 மக்கள் இயக்கம்

2008 மே 29 மன்னராட்சி ஒழிக்கப்பட்டது.

2015–ல் புதிய அரசியல் சாசனம்.

இந்துக்கள் நிறைந்த நாட்டில் மதச்சார்பற்ற, ஜனநாயக கூட்டாட்சி முறை எனும் சட்டவரைவையும், சோசலிச திசைவழி என்பதையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றது.

ஆசியாவில் ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி, வலுவான கட்சி. நூரி ஆட்சியில் கட்சி தடை செய்யப்பட்டது. கம்யூனிஸ்டுகள் படுகொலை செய்யப்பட்டனர். 1960, 1961–ல் இருபத்தி ஏழுழாயிரம் கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டனர்.

சதாம் உசேன் ஆட்சியில் இராணுவத்தில் உள்ள கம்யூனிஸ்டுகளை "களை" எடுப்பது எனக் கூறி, மிக மோசமான படுகொலைகள் நிகழ்ந்தேறியது. கட்சி இதனை கண்டித்த தோடு நாடாளுமன்றத்தில் இதன் மீதான கவன ஈர்ப்புக்கு முன்கை எடுத்தது.

வியட்நாம் விடுதலைப் போரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் ஆதரித்து வந்துள்ளது. அதேபோல் ஜப்பான், பிரான்ஸ், அமெரிக்கா என மூன்று ஏகாதிபத்தியங்களை வியட்நாம் வெற்றி கொண்டது.

1954–ல் நேரு வியட்நாம் சென்றபோதும் 1960களின் ஹோசிமின் இந்தியா வருகை தந்த போதும் இந்தியா, வியட்நாமின் விடுதலையை ஆதரித்து அறிக்கை விடவும், நாடாளுமன்ற தீர்மானங்கள் நிறைவேறவும் குரல் எழுப்பியது. நேரு இதனை ஏற்றுக்கொண்டார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் 'ஆபரேஷன் ஃபீனிக்ஸ்' எனக் கூறி, நாபாம் குண்டுகளை வியட்நாம் மீது வீசியது. ஒட்டு மொத்த வியட்நாமும் பற்றி எரிந்தது. வியட்நாம் மீது 7 லட்சம் குண்டுகள் வீசப்பட்டதாக பின்னர் அமெரிக்கா அறிவித்தது.

இத்தருணங்களில் வியட்நாமிற்கு ஆதரவாக உன் பெயரும், என் பெயரும் வியட்னாம், வியட்நாம் என்ற நாடு தழுவிய இயக்கத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவங்கியது.

சீனா 1949ல் புரட்சியில் வாகை சூடியது. மாவோ தலைமையில் மக்கள் சீனம் நிறுவப்பட்டது. அதே காலத்தில் மன்னர் "சியாங்கே ஷேக்" வம்சாவழியினர் தைவான் நிலப் பரப்பிற்குள் ஓடிவிட்டனர். இவர்களை அமெரிக்கா ஆதரித்தது. தைவான்தான் சீனா என அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் கூறின. இத்தருணத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், ஜவர்கலால் நேருவும், மாவோ தலைமையிலான மக்கள் சீனத்தை ஆதரித்தனர். பின்னர் உலகின் பல நாடுகள் ஆதரித்தன.

அரபு மண்ணில் வலுக்கட்டாயமாக இஸ்ரேல் திணிக்கப் பட்டது. பாலஸ்தீனர்கள் சொந்த தாயகத்தில் அகதிகளாக்கப் பட்டனர். பாலஸ்தீன விடுதலைப் போரை கட்சி எப்போதும் ஆதரித்துள்ளது.

'இண்டிபட்டா' எனும் விடுதலைப் போரை அமெரிக்கா வன்முறைப் போர் என்ற போது இந்திய இடதுசாரிகள் தான் அதனை விடுதலைப்போர் என்றனர். இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது பி.எல்.ஓ.வின் அலுவலகம் டில்லியில் துவங்கப்பட்டது. அதை கட்சி ஆதரித்தது. பாலஸ்தீனத்தை இந்தியா அங்கீகரிக்க, முதல் தீர்மானத்தை சிபிஐ இயற்றியது.

இந்தோனேசியாவில் 1972–ல் இமெல்டா அரசு இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியை தடை செய்தது. பல நூறு, பல ஆயிரம் கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டனர். சுகர்னோவின் ராணுவ சர்வாதிகாரம் அத்துமீறி சென்று கட்சியின் பொதுச் செயலாளர் ஐதிக் படுகொலை செய்யப்பட்டார். 1949, 1970 களில் அடுத்தடுத்து கம்யூனிஸ்டுகள் வேட்டையாடப்பட்டனர்.



**இத்தருணங்களில் மிக ரகசியமாக கட்சித் தோழர் பார்வதி கிருஷ்ணனை பிலிப்பைன்ஸ்க்கு அனுப்பி உண்மைகளை உலகறியச் செய்தது. பிலிப்பைன்ஸ் கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க பிரசுரங்கள், துண்டறிக்கை, நாடாளுமன்ற கவன ஈர்ப்பு என கட்சி ஈடுபட்டது.**

அதேபோல எத்தியோப்பிய புரட்சிகர அரசை கட்சி ஆதரித்தது. இந்தியா– புரட்சிகர அரசை அங்கீகரிக்க வலியுறுத்தியது. மெங்கிஸ்டு மரியம் எனும் சோசலிச ஆட்சியாளரை கட்சி சார்பில் தோழர் என்.கே.கிருஷ்ணன் சந்தித்தார். எத்தியோபியாவிற்கும் பின்னர், அங்கோலாவின் புரட்சி அரசை ஏற்படுத்திய அகிஸ்டினோ நெட்டோவையும் சந்தித்து ஆதரவு தெரிவித்தது, இந் நாடுகளுக்கு இந்தியா, மருந்து – உணவுப் பொருட்கள் கொடுத்துதவ கட்சி கேட்டுக் கொண்டது. இந்திய நாடும் உதவிகளை செய்தது. அதேபோல ரோபன் தீவுகளில் நீண்ட காலம் சிறையில் வாடிய மண்டேலா, டாக்டர் சிசுலு, டாக்டர் டாடு, ஆலிவர் டாம்போ போன்றவர்களை விடுதலை செய்ய கட்சி தனது காங்கிரஸில் தொடர்ந்து தீர்மானங்களை நிறைவேற்றி வந்துள்ளது. கட்சி காங்கிரஸ்களில் தொடர்ந்து இதன் பிரதிநிதிகள் பங்கேற்று வந்தனர்.

நேட்டால் காங்கிரஸ், தென் ஆப்பிரிக்கா காங்கிரஸ், தென்னாப்பிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் ஒற்றுமைக்காக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து பாடுபட்டுள்ளது.

1955 கம்யூனிஸ்ட் தடை சட்டத்தை **(suppression of communism act)** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்ததோடு, இந்திய நாடாளுமன்றத்தில் தென்னாப்பிரிக்க அரசை கண்டிக்கும் தீர்மானத்தை முன்மொழிய வற்புறுத்தியது.

ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்கான **(pan african)** 'பேன் ஆப்பிரிக்கன்' மாநாட்டை கட்சி ஆதரித்தது. அந்த மாநாடுகளில் பங்கேற்றது. தென்னாபிரிக்க விடுத லைப் போராளிக்கு இந்தியாவில் உயர்ந்த விருதுகள் வழங்கப் பட்டபோது, கட்சி வரவேற்றது; பாராட்டியது.

தற்போதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது சர்வதேசிய பாதையில் பயணித்தபடி உள்ளது. 'பர்மாவில்' ராணுவ ஆட்சி முடிவுக்கு வரவேண்டும். ஆங் சாங் சூகி விடுதலை செய்யப்படவேண்டும் என கட்சி குரல் எழுப்புகிறது. ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய "நேட்டோ" நாடுகள் தங்கள் ராணுவத் தளங்களை ஆசியாவிலிருந்து விலக்கிக்கொள்ள வேண்டும் என கட்சி எச்சரிக்கிறது.

கிழக்காசிய நாடுகள், தென்கிழக்கு ஆசிய நாடுகள், அரபு நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள் தத்தம் பிரதேசங்களில் ஒரு "கூட்டிசைவை" எதிர்கால நலன் பொருட்டு உருவாக்கிக் கொள்ள வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது. வரும் நூற்றாண்டுகள் ஆசிய, ஆப்பிரிக்க நூற்றாண்டுகளாக மலர இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது.

ஏகாதிபத்திய காலனிய நுகத்தடிகள் யாவும் அழிந்தொழிய கட்சி கரம் உயர்த்துகிறது.

தொடர்புக்கு: **98408 54707**



டிசம்பர் 26 1925

**- டி.எம்.மூர்த்தி**

# மங்காத தலைவர் தங்கமணி



**அவரிடம் இருந்து அழைப்பு வரும் தொலைபேசியை காதில் வைத்தவுடன் 'தங்கமணி பேசுறேன்' என்று சொல்வது இப்போதும் காதுகளில் ஒலிக்கிறது.**

ஒருபோதும் தன்னை கே.டி.கே. என்று சொல்லிக் கொண்டதில்லை. தோழர் கே.டி.கே. தங்கமணி அவர்கள் மறைந்து 20 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. அவரை நேரில் பார்த்திராத, கேட்டும் படித்தும் அறிந்துள்ள புதிய தலைமுறை வந்து கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் அவரோடு பேசி, பழகி உறவாடிய தலைமுறை விடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

நாளாக ஆக நினைவுகளிலிருந்து மங்கி மறைந்து போவதற்கு பதிலாக, தோழர் கே.டி.கே. முன்னைவிட எடுப்பாகவும், இப்போதும் வழிகாட்டுபவராகவும் நம் நினைவுகளில் தங்கியிருக்கிறார். அந்த நினைவுகளைப் புதுப்பித்துக் கொண்டே இருப்பது அவசியமானது.

சமூக ஊடகங்களின் மூலம் எதையாவது மக்களிடம் கொண்டு செல்வது எளிதாகி இருக்கிறது. அவரைப் பற்றி உண்மையில் எதுவும் அறியாதவர்கள், தாம் நெருக்கமாக இருந்தது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக பல பொய்ச் செய்திகளையும் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

தோழர் கே.டி.கே. தங்கமணி "செருப்பு அணிய மாட்டார்; கதர் சட்டை வேட்டி தான் உடுத்துவார்; கருப்பட்டிக் காபிதான் குடிப்பார்; சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த தனது வீட்டைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எழுதிக் கொடுத்துவிட்டார்; அவரது கண்ணாடியும், கைத்தடியும் அங்கே வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.." என்றெல்லாம் சமூக ஊடகங்களில் அடிக்கடி இடுகைகள் வருகின்றன. இவை அனைத்தும் பொய்களே! தோழர் அறந்தை மொழியில் சொன்னால், ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்கள்.

கம்யூனிஸ்ட் இயக்கம் கண்டெடுத்த ஆகச்சிறந்த மாமனிதர்களில் தோழர் கே.டி.கே.யும் ஒருவர். பெரும் கோடீஸ்வரர் வீட்டில் பிறந்தவர். திருமங்கலம், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் பள்ளி, கல்லூரி படிப்பை முடித்தது மட்டுமில்லாமல், லண்டனுக்குச் சென்று சட்டம் பயின்று பார்அட்லா பட்டம் பெற்றவர். இந்திய வரலாற்றில் சிறப்புமிக்க மனிதர்களான இந்திராகாந்தி, பூபேஷ் குப்தா, ஜோதிபாசு, இந்திரஜித் குப்தா, மோகன் குமாரமங்கலம், பார்வதி குமாரமங்கலம், என்.கே. கிருஷ்ணன், பெரோஸ் காந்தி ஆகியோரை கல்லூரித் தோழர்களாகக் கொண்டு பழகியவர். லண்டன் கிளப் ஹாக்கி அணியின் சார்பில், ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் நடந்த போட்டிகளில் பங்கேற்ற ஹாக்கி விளையாட்டு வீரர்.

சிறந்த தர்க்க ஞானமிக்க வழக்கறிஞர். நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் பின்னர் உழைக்கும் மக்களுக்கான போராட்டங்களிலும் அரை நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக பங்கேற்றவர். அதற்காக, பிரிட்டிஷ் இந்தியாவிலும், விடுதலை பெற்ற இந்தியாவிலும் எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றவர். சொல்லிமாளாத சிறைக்கூட சித்திரவதைகளுக்கு ஆளானவர்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்தவர். இ.எஸ்.ஐ. எனச் சொல்லப்படுகிற தொழிலாளர் அரசு மருத்துவக் காப்பீட்டு திட்டம் நாடாளுமன்றத்தில் முழுமையாக இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு நோய் நொடியும், விபத்து ஏற்பட்டால் முதலாளிகள் கைவிட்டு விடுவார்கள் என்பதால், மாதந்தோறும் முதலாளிகளிடமும் தொழிலாளிகளிடமும் நிதிப் பங்களிப்பு பெற்றுக்கொண்டு, அரசாங்கமே தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கும் திட்டம் இது. பல்வேறு வளர்ந்த நாடுகளுக்கு சமமாக இந்தத் திட்டம் உருவாக்கப்படுவதற்கு நாடாளுமன்றத்தில் தோழர் கே.டி.கே. வாதிட்ட முறை அற்புதமானது. இன்றும் அது நாடாளுமன்ற பதிவேடுகளிலே இருக்கிறது.

அதுபோலவேதான் போக்குவரத்து தொழிலாளர், உள்ளாட்சித் தொழிலாளர், பஞ்சாலை தொழிலாளர் உள்ளிட்ட சகல பகுதி தொழிலாளர்களுக்காகவும் சட்டப்பேரவையில் அவர் வாதிட்டு இருக்கிறார். பல்வேறு சட்டங்கள் உருவாக்கப்படுவதற்கும், செயல்படுத்தப்படுவதற்கும், தொழிலாளர் பிரச்சனைகள் அரசின் உரிய கவனம் பெற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் அவர் காரணமாக இருந்திருக்கிறார். இதை கவிஞர் ஜீவபாரதி தொகுத்த சட்டப்பேரவையில் கே.டி.கே. தங்கமணி என்ற நூலைப் படித்து உணரலாம்.

கே.டி.கே. ஒரு அற்புதமான ரசிகர். ஷேக்ஸ்பியர் மீது அவருக்கு பெரும் ஈடுபாடு உண்டு. 80 வயதைத் தொட்ட போதும் கூட 'மாக்பத்' நாடகத்தின் பல்வேறு வரிகளை மடமடவென்று சொல்வார். பேராசான் காரல் மார்க்சுக்கு பிடித்தமான ஷேக்ஸ்பியர் வரிகளை எடுத்துக் கூறுவார். தமிழின் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையை ஆய்வு செய்து தனிப் புத்தகம் எழுதியிருக்கிறார். விடுதலைப் போரில் விழுந்த மலரே பாடலில் வரும் 'இதய கனவுகள் ஈடேறும் சத்தியம்' மற்றும் பட்டுக்கோட்டையின் 'சிந்தித்துப் பார்த்து செய்கையை மாற்று, தவறு சிறுசா இருக்கையில் திருத்திக்கோ' ஆகிய வரிகளில் லயித்துப் போவார்.

தமிழ் திரைப்படப் பாடல்களிலும் அவருக்கு நல்ல பரிச்சயம் உண்டு. சோவியத் யூனியனில் ஏதோ ஒரு விழாவில் பாடச் சொன்ன போது, பட்டிக்காடா பட்டணமா படத்தில் வரும் 'என்னடி ராக்கம்மா' பாடலை பாடியதாக பாடிக் காட்டுவார். சட்டப்பேரவை உரைகளிலும் கூட சினிமா பாடல்கள் உட்பட அனைத்து விதமான இலக்கியங்களையும் அவர் மேற்கோள் காட்டி இருப்பதைக் காணமுடியும். நிறைய திரைப்படங்களும் பார்ப்பார். அவரை சந்திக்கவோ, மனதில் பட்டதை பேசவோ யாருக்கும் தயக்கம் ஏற்பட்டது இல்லை. அப்படி ஒரு வசதியான இணக்கச் சூழலை எப்போதும் கொண்டிருப்பார். அபூர்வமாகத்தான் கோபப்படுவார். "நீங்க சொல்றது சரி இல்லைங்க" என்பதுதான் உச்சபட்சமாக கோபத்தில் அவர் உச்சரிக்கும் சொல். யார் மீதாவது எழும் கோபமும் கூட இயக்கம் சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கும். தான் சொன்னதை அல்லது நினைத்ததை ஒருவர் செய்யவில்லை என்பதற்காக அவர் ஒருபோதும் கோபப்பட்டது இல்லை. கோபம் வந்தால் சில நாட்களுக்கு அந்தத் தோழரோடு பேசமாட்டார். பிறகு அவரைப் பற்றி நான்கு நல்ல வார்த்தை அவர் காதில் விழுமானால் அந்த கோபம் பறந்து போய்விடும். வன்மத்தை நெஞ்சுக்குள் வைத்துப் பூட்டுவதோ, அதையே முன்வைத்து அவரை வாட்டுவதோ அவருக்குத் தெரியாது.

**அவர் எளிமையாக இருந்ததைப் பலரும் சொல்வார்கள். அது அவரது இயல்பான பழக்கமாக இருந்தது. மதுரையில் சாலையோர உணவு கடைகள் அநேகம். எந்த கடையிலும் போய், முக்காலியில் அமர்ந்து கொண்டு கையில் தட்டை வைத்துக் கொண்டு சாப்பிடுவார்.**

தோழர்கள் வீட்டுக்கு சாப் பிட அழைத்தால், உடனே ஒப்புக் கொள்வார். விருந்துக்கு செல்கிறேன் என்று பெருமையாக தோழர்களிடம் சொல்லிக் கொண்டே இருப்பார். வீடு குடிசையாக இருந்தாலும், தரையில் அமர்ந்து சாப்பிட்டாலும், எளிய உணவு வகையாக இருந்தாலும் ருசித்துச் சாப்பிடுவார்; குடும்பத்தினரை எல்லாம் அழைத்துப் பாராட்டுவார். ஒரு கயிற்றுக் கட்டில், திண்ணை எதுவானாலும் படுத்துத் தூங்குவார்.

அண்மையில் கல்பாக்கம் சங்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான தோழர் சக்கரபாணி அவர்களோடு பேசிக் கொண்டிருந்தேன். கல்பாக்கம் அணுமின் நிலையத்துக்கு அடிக் கல் நாட்டிய போதே ஏஐடியுசி தொழிற்சங்கம் அங்கு துவக்கப்பட்டது. கே.டி.கே. அதன் தலைவராக இருந்தார். அப்போது நிர்வாகம் சங்கத்திற்கு அலுவலகம் ஒதுக்கித் தரவும் இல்லை; சங்க நிர்வாகிகள் வந்தால், விருந்தினர் மாளிகையில் தங்க அனுமதிப்பதும் இல்லை.

டவுன்ஷிப்புக்கு வெளியில், காற்றோட்டம் இல்லாத, ஓடு வேய்ந்த சின்ன அறையில் சங்கம் இயங்கியது. இரவு தங்க நேர்ந்தபோது உள்ளே புழுக்கமாக இருந்ததால், தெருவோரத்தில் கே.டி.கே. துண்டை விரித்துப் படுத்தாராம். பக்கத்திலேயே சக்ரபாணியும் படுப்பதைத் தவிர வேறென்ன வழி! சக்கரபாணியின் தந்தை அந்த ஊர் பஞ்சாயத்து தலைவர். அதிகாலையில் வேலைக்கு செல்பவர்கள், பிரசிடெண்ட் மகன் தெருவில் படுத்து இருப்பதைப் பார்த்தால் அசிங்கமாக இருக்கும் என்றெண்ணி, அதிகாலை 3 மணியளவில் சக்கரபாணி எழுந்து வீட்டுக்கு சென்றுவிட்டார். விடியும் நேரத்தில் மறுபடியும் வந்து கே.டி.கே. பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். வெகு இயல்பாக கேடிகே எழுந்து, எங்கே இடையில் காணோம் என்று கேட்டாராம். 'என் தகுதிக்கு நான் தெருவில் படுக்க முடியாது என்று கருதினேன். ஆனால் கே.டி.கே.வுக்கு அதெல்லாம் பொருட்டே இல்லை" என்று சக்கரபாணி சொல்லும்போதே பெருமிதம் பொங்கியது அவருக்கு.

1980களின் துவக்கம்; சிபிஐ, சிபிஎம் இணைந்து கூட்டங்கள் நடத்த துவங்கிய புதிது. சிபிஐ சார்பில் பேச கே.டி.கே. மதுரை வந்தார். கூட்டம் நடத்துவது பற்றி கலந்து பேசவே இல்லை என்பதால் கூட்டத்துக்கு போவதில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகரக் குழு முடிவு செய்திருந்தது. முடிவை அவரிடம் சொன்னோம். ஒரு ரிக்சா வண்டியில் ஏறி, தனியாக கூட்டத்துக்குப் போய் பேசிவிட்டு வந்தார். கட்சி, தொழிற்சங்கத்தில் உயர்நிலைக் குழு முடிவு செய்துவிட்டால் அதுதான் கே.டி.கே.யின் வேதம். அந்த முடிவை செய்து முடிக்காமல் அவரை யாராலும் தடுக்க முடியாது.

ஒரு முறை மாநில அளவிலான உண்ணாவிரதம் நடந்த போது, நான் திண்டுக்கல்லுக்கு அனுப்பப்பட்டேன். அங்கு போன போது, பந்தல் போட்டு இருந்தது. ஆனால் யாரும் இல்லை. பாலன் இல்லத்திற்கு எஸ்.டி.டி. மூலம் போன் செய்த போது, கே.டி.கே. தான் எடுத்தார். ஒரே ஆளாக இருந்தாலும் பரவாயில்லை, உண்ணாவிரதத்தில் அமர்ந்து விடுங்கள் என்று வழிகாட்டினார். அவ்வாறே செய்தேன்.

எனது 22 வயதில், மதுரை மாவட்ட பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தின் அலுவலக செயலாளர் நிலையிலிருந்து தமிழ்நாடு ஏஐடியுசி செயலாளர் நிலை வரை, 22 ஆண்டுகாலம் அவரோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். ஒரே ஒரு தடவை கூட "அவர் அப்படி, இவர் இப்படி" என்றெல்லாம் அவர் கிசுகிசுத்ததே இல்லை. வேறு யாரிடமும் அப்படிப் பேசிக் கேட்டதும் இல்லை.

அவருக்கு அவர் வாழ்நாளில் பெரிதாகத் தோன்றியவை, அவர் வியட்நாமின் புரட்சித்தலைவர் ஹோசிமின்னையும், சீன புரட்சியாளர் மாட்சேதுங் கையும் நேரடியாக சந்தித்துப் பேசிய நிகழ்வுகள்தான். 1946ல் சிங்கப்பூர் சென்றபோது, அங்குள்ள கட்சி தோழர்கள் தலைமறைவாக இருந்த வியட்நாமின் புரட்சித்தலைவர் ஹோசி மின்னைச் சந்திக்க அழைத்துச் சென்றிருக்கிறார்கள். பின்னாளில் வியட்நாமின் குடியரசுத்தலைவராக ஹோசிமின் டில்லி வந்த போது, கே.டி.கே. நாடாளுமன்ற உறுப்பினர். பிரதமர் நேரு, இவரை ஹோசிமின் னிடம் அறிமுகப்படுத்தியபோது, இவரை எனக்கு நன்றாக தெரியும், ஒரு நாள் முழுக்க என்னோடு இருந்திருக்கிறார் என்று சொன்னாராம்.

அதேபோல, ஏஐடியுசி சார்பில் சீனா சென்றிருந்த போது, தலைவர் மாவோவை சந்தித்தது. வெளிநாட்டினரிடம் எச்சரிக்கையாக இருக்கும் மாவோ, இந்தியர் அதிலும் சிங்காரவேலர் ஊரிலிருந்து வருபவர் என்றதும் ஓடி முன்வந்து கே.டி.கே. யுடன் கைகுலுக்கினாராம். இவற்றைச் சொல்லும்போதே கே.டி.கே. முகத்தில் தனி ஒளி உண்டாகும்.

அதேபோல சிங்காரவேலருடனான அவரது பழக்கம். "தொழிலாளிகளுக்காகப் பரிந்து பேசும்போது, தம்மை மிக நல்லவர் போல் காட்டிக்கொள்ள முதலாளிகள் பல்வேறு வாதங்களை சாதுரியமாக வைப்பார்கள். அவர்களைச் சந்திக்கும் முன்பே இவர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று மூன்று முறை நெஞ்சில் குத்திக் கொண்டு அப்புறம் போய் சந்தியுங்கள்" என்று சிங்காரவேலர் சொன்னாராம். கே.டி.கே. இதைச் சொல்லி நீங்களும் இதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள் என்பார்.

கே.டி.கே.யை பொது வாழ்வுக்கு வாருங்கள் என்று இழுத்து வந்த திரு.வி.க மீது அவர் பெருமதிப்பு வைத்திருந்தார். விடுதலைக்குப் போராடிய இந்த உத்தமர்கள் மீது, விடுதலை அடைந்த தேசத்தின் காங்கிரஸ் அரசு பிரயோகித்த அடக்குமுறையின் போது, அவரோடு சிறையிலிருந்து சித்திரவதைகளை அனுபவித்த தோழர்களையும், குறிப்பாக ஐ.வி. சுப்பையாவின் உயிர்த் தியாகத்தையும், பூந்தோட்டம் சுப்பையாவின் கட்சி மீதான பக்தியையும், டிவிஎஸ்ஸில் வேலை நிறுத்தம் செய்து கொடுமைகளை அனுபவித்த தோழர்களையும் பற்றி நெக்குருகப் பேசுவார். பி. ராமமூர்த்தி அவர்களை மிகவும் நேசிப்பார்; என் தலைவர் என்று சொல்வார்.

இடத்தை இட்டு நிரப்ப முடியாத பேராளுமை கொண்ட தலைவர்களை நாம் இழந்திருக்கிறோம். அதில் முன்வரிசையில் நிலைத்து நிற்பவர் தோழர் கே.டி.கே. தங்கமணி.

தொடர்புக்கு: **73971 30367**

டிசம்பர் 26 1925





– நா.பெரியசாமி

# வணங்கி மகிழும் எளிமை...

**பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான கம்யூனிஸ்ட் லீக் அமைப்பு ஒரு தீர்மானத்தின் மூலம் அதன் முக்கிய உறுப்பினர்களான காரல் மார்க்சும், பிரடெரிக் ஏங்கல்சும் இணைந்து கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையை வரைவு செய்தனர். அதன் உறுப்பினர்கள் அனைவரும் அறிஞர்கள் என்பதுடன் களப் போராளிகள் அறிக்கை விவாதித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் 1848 ஆண்டில் வெளியிடப்பட்டது.**

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் பெரும் புயலாக வீசியது.

“லாபம்“ என்பது தனி மனித சாதனை, தொழில் நிர்வாக சாமார்த்தியம், என்றெல்லாம் பேசியும், கருதியும் வந்த புனைவை உடைத்து நொறுக்கியது.

சமூக இயக்க சக்தியின் மூலம் உழைப்பு என்பதை உலகம் ஏற்கும் வகையில் எடுத்து வைத்து “உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்” என்ற முழங்கியது..

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் புரட்சி முழக்கம் ஜனநாயக புரட்சியாளர்களை ஈர்த்து அணி திரட்டியது.

சர்வகால சாலைகளில் பயின்று வந்த மாணவர்கள் பெரும் உடைமைகளையும், அதிகாரச் செல்வாக்கும் கொண்ட குடும்பங்களில் இருந்தும், அப்போதைய அரசுகளில் பணியாற்றிய உயர் அதிகாரிகள் குடும்பங்களில் இருந்தும் வந்திருந்தனர்.

பாட்டாளிகள் தலைமையில் புரட்சி, தொழிலாளி வர்க்கப் புரட்சி, வர்க்கங்கள் இல்லாத சமத்துவ சமூகம் கட்டமைக்கும் உயர்ந்த நிலை நோக்கி செல்லும் என்பதை அறிவியல் பூர்வமாக விளக்கிய சமூக விஞ்ஞானத்தை நடைமுறைப்படுத்த முனைப்புக் காட்டினர்.

ஜார் மன்னனின் ருஷ்ய நாட்டில் 1917 அக்டோபரில் நடந்த ‘போல்ஷ்விக்’’ புரட்சியின் வெற்றி, விடுதலை போராட்ட வீரர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதன் விளைவாக 1925 ஆம் ஆண்டு டிசம்பர் 26 இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிறந்தது. ஆம்! ஒரு புதுவகைபட்ட , புரட்சிகர அரசியல் கட்சி நிறுவப்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்த்தில் அண்ணல் மகாத்மா காந்தி நேரடியாக களம் இறங்கி, ஒத்துழையாமை இயக்கம் அறிவித்தார். அதனை ஒடுக்க பிரிட்டீஷ் காலனி ஆட்சியினர் காட்டுமிராண்டித்தன அடக்குமுறை தாக்குதல் நடத்தினர். ஆவேசம் கொண்ட மக்கள் செளரி செளரா என்ற ஊரில் ஒரு காவல் நிலையத்தை தீ வைத்துக் கொளுத்தினர்.

ஆறு லட்சத்துக்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருக்கும் இந்திய காலனி ஆட்சி எல்லைக்குள், ஒரு கிராமத்தில் நடந்த தீவிரத் தாக்குதலை காரணம் காட்டி, ஒத்துழையாமை இயக்கம் வன்முறை வடிவத்துக்கு சென்று விட்டது என்று கூறிய மகாத்மா ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற்றுக் கொண்டார். இந்த அறிவிப்பு விடுதலைப் போராட்ட வீரர்களிடம் பெரும் சோர்வையும், அவ நம்பிக்கையினையும் உருவாக்கியது.

இந்தச் சூழலில் தான் ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுந்தம் என்ற ஊரில் நிலச்சுவான்தார் குடும்பத்தில் பிறந்தார்.

சுப்பிரமணி பாரதியின் தேச பக்திப் பாடல்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் தெரு முழக்கங்கள், வ.உ.சி. சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவாவும் முன்னின்று நடத்திய போராட்டங்கள் இரா.நல்லகண்ணு வாழ்வில் தேசிய போராட்ட உணர்வுகளை ஊட்டின.

சிறுவயதில், அவரது வயதையொத்த சிறுவர்களை திரட்டி பாரதியின் பாடல்களை தெருவில் பாடிச் சென்று, விடுதலை உணர்வுக்கு உர மூட்டி வந்தார்.

கால வளர்ச்சியில் தமிழ் மீதும், தமிழ் இலக்கியம் மீதும் ஆழ்ந்த காதல் கொண்டார். இதன் காரணமாக தமிழ் தென்றல் திரு வி.கலியாணசுந்தரம் அவர்களால் ஈர்க்கப்பட்டு, அவரது தமிழ் நடையை பயின்று, பின்பற்றத் தொடங்கினார்.

பிரிட்டீஷ் காலனி ஆட்சி கல்வி முறையில் இருந்த இண்டர் மீடியட் வரை பயின்றார். இவர் பயிலும் காலத்தில் இவரது ஆசிரியர்களில் ஒருவரான பலவேசம் செட்டியார் என்பவர் கம்யூனிஸ்ட் இலக்கியங்களை தோழர் இரா. நல்லகண்ணுக்கு அறிமுகப்படுத்தி, அவைகளை பழுதறக் கற்று, செய்யப்படுமாறு அறிவுரை வழங்கிவந்தார்.

இதனைத் தொடர்ந்து இரா.நல்லகண்ணு கம்யூனிஸ்ட் பாதையில் பொது வாழ்வுப் பயணத்தைத் தொடங்கினார். அதில் தொடர்ந்து பயணித்து 96 ஆண்டுகளை நிறைவு செய்து 97 ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார். அந்த மகத்தான மனிதரோடு 40 ஆண்டுகளுக்கும் மேலாக இணைந்து பயணித்து வருவதை எண்ணி பெருமைப்படுகிறோம்.

1977 ஆம் ஆண்டில் ஏஐடியூசி தொழிற்சங்க அமைப்பின் வழியாக எனக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிமுகமானது. இருபது வயது இளைஞராக இருந்த காலத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினோம். இதன் தொடர்ச்சியாக 1980 ஆம் ஆண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு உறுப்பினராக இணைந்து கொண்டோம்.

கட்சியின் ஈரோடு மாவட்டக் குழு விவசாயத் தொழிலாளர் அரங்கில் பணி புரியுமாறு பணித்தது.

அப்போது தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இரா.நல்லகண்ணு செயல்பட்டு வந்தார். ஈரோடு மாவட்டச் செயலாளர் பவானி, காடையம் பட்டியைச் சேர்த்த கே.பி.சென்னிமலை, பொருளாளராக கருமாண்டாம் பாளையம் வைத்தியர் கே.ராமசாமி ஆகியோர் செயல்பட்டனர்.

இந்தக் காலத்தில் மாவட்ட சிறப்புப் பேரவைக் கூட்டம் 1980 ஜூலை 30 ஆம் தேதி ஈரோட்டில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, வழிகாட்ட இரா.நல்லகண்ணு வந்திருந்தார். இந்தக் கூட்டத்தில் தான் இரா.நல்லகண்ணு அவர்களை முதன்முதலாக சந்தித்தோம்.

அவர் கூட்டம் தொடங்கும் முன்பாக ஈரோடு பகுதியில் நடந்து வரும் வேளாண் பணிகள், சாகுபடி முறைகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு கிடைத்து வரும் வேலை வாய்ப்பு, அதில் கிடைக்கும் ஊதியம் என பல்வேறு விபரங்களை கேட்டறிந்தார்.

இது எமது பணி முறைக்கு ஒரு புதிய பார்வையை கொடுத்தது. எமது அழைப்பை ஏற்று வந்திருந்த தோழர்கள் வீ சென்னியப்பன், பி. வேலுசாமி (திருப்பூர்) பழனி, சி. குப்பன், ஆர். நாச்சிமுத்து, மோளையன் என்கிற தங்கவேலு, நா சடையப்பன், கிட்டான், பெருமாள் என பலரும் நடைமுறை அனுபவத்தோடு விபரங்கள் கூறியதை ஆர்வத்துடன் குறித்துக் கொண்டார்.

கையில் ஒரு நோட்டுப் புத்தகம் வைத்து, ஆங்காங்கு நிகழ்வுகளை குறித்துக் கொள்ளும் பழக்கம் அன்று முதல் எம்மை பற்றிக் கொண்டது. இன்னும் தொடர்கிறது.

இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் மாவட்டத் துணைச் செயலாளர் பொறுப்புக்கு தேர்வு செய்யப்பட்டோம்.

இதனைத் தொடர்ந்து சங்கத்தின் மாநிலக் குழுக் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டோம்.

மாநிலக்குழு கூட்டங்கள் நிறைவடைந்ததும் அதன் முடிவுகளையும், தீர்மானங்களையும் வரைவு செய்து இரா. நல்லகண்ணு பார்வைக்கு கொண்டு செல்வோம். அவர் வழங்கும் ஆலோசனைகளை ஏற்று, திருத்தங்கள் செய்து சுற்றறிக்கையாக அனுப்பி வைப்போம்.

இதில் ஈடுபாடு காட்டும் எமது ஆர்வத்தை செதுக்கி செப்பம் செய்தவர் இரா.நல்லகண்ணு.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு மாவட்ட இரண்டாவது மாநாடு 1986 ஆம் ஆண்டு ஈரோடு நகரில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கட்சி மாநிலத் தலைமையில் இருந்து தா.பாண்டியன், இரா.நல்லகண்ணு ஆகிய இருவரும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் 6 வது மாநில மாநாடு தருமபுரியில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தலைவராக பி. உத்திராபதி எம்.எல்.ஏ, பொதுச் செயலாளராக இரா. நல்லகண்ணு தேர்வு செய்யப்பட்டதுடன் துணைச் செயலாளர் பொறுப்புக்கு தேர்வு செய்யப்பட்டோம். அன்று முதல் ஆர். என்.கே.வுடன் மேலும் நெருங்கி பழகும் வாய்ப்பு கிடைத்தது.

இதன் காரணமாக 1986 ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைவர் ஜி.கே.மூப்பனார் நிலத்திலும், ஈரோடு மாவட்டம், பழைய கோட்டை மன்றாடியார் நிலத்திலும் நடந்துள்ள உச்சவரம்பு சட்ட மோசடிகளை அம்பலப்படுத்தும் போராட்டம் கட்டமைக்கப்பட்டது.

தஞ்சாவூர் மற்றும் ஈரோடு ஆகிய இரண்டு மாவட்டங்களில் மட்டும் நிலப்போராட்டம் நடத்தத் தேர்வு செய்யப்படட்டது இதில் தோழர்கள் ப.மாணிக்கம், மா.காத்தமுத்து, இரா.நல்லகண்ணு ஆகியோர் எம்மீது காட்டிய நம்பிக்கை என்றும் காப்பாற்ற வேண்டிய பொக்கிஷமாக கருதுகிறோம்.

கட்சி அமைப்பை அந்தந்த பகுதிகளில் நிறுவிய தலைவர்களாக, பிரிட்டிஷ் ஆட்சியிலும், காங்கிரஸ் ஆட்சியிலும் பல ஆண்டுகள் சிறைக் கொட்டடியில் சித்தரவதைகளை சந்தித்த மூத்த தோழர்கள் பலர் இருக்கும் போது அதற்கு நாம் எந்த வகையிலும் பொருத்தமில்லை. அவர்களில் யாரேனும் ஒருவர் பொறுப்பு ஏற்றுக் கொள்வதுதான் பொருத்தம் என கூறினோம். அனைவரும் சேர்ந்து ஒரு மனதாக தேர்வு செய்து அறிவித்தனர். இந்தத் தகவலை தோழர் ஆர் என் கே மற்றும் மா காத்தமுத்து ஆகியோரிடம் தெரிவித்த போது அவர்களும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது சரிதான் என ஆமோதித்தனர்.

இதன் பிறகு சில வருடங்கள் கழித்து கட்சியின் மாநில மாநாடு மதுரை மாநகரில் நடைபெற்றது.

அப்போது கட்சியின் மாநில செயலாளர் பொறுப்பு வகிக்க காலவரம்பு ஏதும் இல்லை. இருப்பினும் மாநிலச் செயலாளராக இருந்த தோழர் ப.மாணிக்கம் பொறுப்பில் இருந்து விலகி, புதிய செயலாளராக இரா.நல்லகண்ணுவை முன்மொழிந்தார்.

இரா.நல்லகண்ணு மாநிலச் செயலாளர் பொறுப்பில் இருந்த 1992 – 2005 கால கட்டம் கட்சி வரலாற்றில் முக்கியத்துவம் கொண்டதாகும்.

1994 ஆம் ஆண்டு பெருந்துறை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை சந்தித்தோம். இடைத் தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை தி. மு.கழகம் ஆதரிக்கும் என கலைஞர் அறிவித்தார். இந்த அறிவிப்பு வெளியான நேரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கட்சியும் இணைந்து தஞ் சாவூர் மாநகரில் பிரம்மாண்டமான பேரணியும், திலகர் திடலில் பொதுக் கூட்டமும் நடத்தியது.

இதனைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் தனி மேடையில் பரப்புரை செய்வது என அறிவித்தது.

திமுக தலைவர் கலைஞர் பெருந்துறை தொகுதியில் இரண்டு நாட்கள் பரப்புரை செய்தார். ஆனால் இந்தத் தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நல்ல வாக்குகள் பெற்றிருந்த போதிலும் மூன்றாம் நிலைக்கு சென்று விட்டது.

அஇஅதிமுக ஆட்சி காலத்தில் நடந்த இந்த இடைத் தேர்தலில் அதிகார அத்துமீறலும்,சாதி வெறியூட்டப்பட்டதும் ஜனநாயக நெறிமுறைகளை நிராகரித்து வெற்றி பெற்றது.

இதே பெருந்துறை சட்டமன்றத் தொகுதி பொதுத் தேர்தலில் அஇஅதிமுக 17 ஆயிரத்து 500 வாக்குகள் வித்தியாசத்தில் நமது கட்சியால் தோற்கடிக்கப்பட்டது.

தோல்வியை சந்தித்த போதும், வெற்றி பெற்ற போதும் கட்சிப் பணிகளுக்கு வழிகாட்டியவர் இரா.நல்லகண்ணு.

**இரா.நல்லகண்ணு தங்குவதற்கு என ஒருநாளும் தங்கும் விடுதியில் அறை ஏற்பாடு செய்ததில்லை. எல்லாப் பயணங்களிலும் கட்சி அலுவலகத்தில் உள்ள இரண்டு பெஞ்ச்சுகளை இணைத்துப் போட்டு அதில் துண்டு விரித்து தூங்குவதில் தான் அவருக்கு மன நிறைவு. தண்ணீர் தொட்டியில் துணிகளை துவைக்கும் போது தஞ் சாவூர் அலுவலகமும், ஈரோடு அலுவலகமும் தங்குவதற்கும், துணிகளை துவைத்து காய வைத்து கொள்ள மிகவும் வசதியான இடம் என்பதை மகிழ்ந்து கூறுவார்.**

இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த காலம் மறக்க முடியாதது. இரு சக்கர வாகனம் என்றால் ஏதோ மோட்டார் சைக்கிள் என்று நினைத்து விடாதீர்கள். பெரிய கேரியர் வைத்த சைக்கிள் பயணத்தில் அவரை அழைத்துச் சென்ற நாட்களை எல்லாம் என்றும் மறக்க முடியாது.

அவரது எளிய வாழ்க்கை முறை வணங்கி, வழிபட வேண்டிய எளிய வாழ்க்கை.

தொடர்புக்கு : **94431 18544**

டிசம்பர் 26 1925



**- எஸ்.காசிவிஸ்வநாதன்**

**தமிழகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை வளர்த்தவர்களில் இருபெரும் முக்கியமான இரண்டு ஆளுமைகளை குறிப்பிடவேண்டும். அவர்கள் தோழர் கே. பாலதண்டாயுதம் மற்றும் ப.மாணிக்கம்**

பாலன் பொள்ளாச்சி அருகிலுள்ள மக்கினம்பட்டியில் பிறந்து திருச்சியில் இன்டர்மீடியட் முடித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்.

மாணிக்கம் தஞ்சை மாவட்டத்தில் பிறந்து கடலூரில் வளர்ந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். இருவருக்கும் நான்கு வயது மட்டுமே வித்தியாசம். பாலன் 4 வயது மூத்தவர். இருவரும் இளமையிலேயே விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்கப்பட்டவர்கள். போராடியதற்காக பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கப் பணியை நடத்த பொறுப்பேற்று வந்தவர்கள். 1940ஆம் ஆண்டுக்குப் பிறகு மாணவர் அரங்கத்தில் பணியாற்றிய பொழுதினிலே இயக்கப் பணிக்காக வந்தார்கள். மிக நெருங்கிய தோழர்கள்.

1948ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்ட முதல் மாநாடு நடைபெற்றது. பகிரங்கமாக நடைபெற்ற இம் மாநாடு பேராசிரியர் வான மாமலை அவர்களின் தனிப் பயிற்சி கல்லூரியிலேயே நடைபெற்றதாக அறிகிறோம். இம் மாநாட்டில்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் எழுத்துப்பூர்வமான அறிக்கை வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது என்றும், கட்சி உறுப்பினர் கார்டுகள் வழங்கப்பட்டன என்றும் மூத்த தோழர் கள் தகவல்களை சொல்கிறார்கள். ப.மாணிக்கம் நெல்லை மாவட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பாலன் ஆயுள்



கொண்டிருக்கின்றன''

பாலனுடைய தியாகங்களை பற்றி மாணிக்கம் சொல்கிறார் : '' சிறை என்ற அமைப்புக்குள் கைதிகளும், அதிகாரிகளும் எவ்வாறு வாழ்கிறார்கள். நமது தமிழ்ச் சமுதாயத்தின் நியதிகள், பழக்கவழக்கங்கள், அரசின் சட்டங்கள், சிறை அதிகாரிகள் சட்டத்தை நிறைவேற்றும் முறை கைதிகள் என்பவர்களை மனிதத்தன்மையற்ற முறையில் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை எல்லாம் நேரில் அனுபவித்துள்ளோம் . 1949 ஆம் ஆண்டில் போடப்பட்ட நெல்லை சதி வழக்குக்கான விசாரணை 1951ஆம் ஆண்டின் இறுதியில் தான் தொடங்கியது . இந்த விசாரணை விசேஷ விசாரணை கோர்ட்டிலும், விசேஷ செசன்ஸ் கோர்ட்டில் ஒரு ஆண்டுக்கு மேலாக நடைபெற்றது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் 97 பேர். கைது செய்யப்பட்டவர்கள் 92 பேர். இவர்களில் 5 பேர் தோழர் பாலன், மீனாட்சி நாதன், அருணாசலம் இன்னும் இரண்டு பேர் மீது பின்னால் 1953 ஜூனில் விசாரணை துவங்கியது.

இதற்குப் பின்னர் கைதான தோழர் பாலதண்டாயுதம் மற்றும் இருவரையும் சேர்த்து விசாரணை நடந்து, பாலனுக்கும், மீனாட்சிநாதனுக்கும் ஆயுள் தண்டனையும், தோழர் அருணாசலத்திற்கு 5 ஆண்டுகள் தண்டனையும் தரப்பட்டது. பாலனோடு சேர்த்து 11 பேர் நெல்லை கம்யூனிஸ்டு சதி வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றிருந்தனர். மதுரை தோழர்கள் 5 பேர் வேறு வழக்கில் ஆயுள் தண்டனையை கழித்து வந்தனர். மதுரை மத்திய சிறையில் கம்யூனிஸ்ட் ஆயுள் தண்டனை கைதிகள் 16 பேர் இருந்தனர்.

பின்னர் இவர்களில் சிலர் வெவ்வேறு சிறைகளுக்கு அனுப்பப்பட்டனர். ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 24 பேரும் மற்றொரு சதி வழக்கில் மதுரை சிறையில் இருந்தனர் .

1952ல் குடியரசு சட்டத்தின் கீழ் நடந்த புதிய தேர்தல் சமயத்தில் இவர்கள் அனைவரும் சிறையில்.. அப்போது பாலன் தலைமறைவாக இருந்தார்.

1948 முதல் 1952 வரை கொடிய அடக்கு முறை நிகழ்ந்த இடம் மதுரை சிறையாகும் .

# இருபெரும் கம்யூனிஸ்டுகள்...

தண்டனை பெற்று, சிறையில் இருந்து விடுதலையாகும் வரை நெல்லை மாவட்டத்திலேயே 1962 இறுதிவரை செயலாளராக பொறுப்பேற்று செயல்பட்டார்.1954ல் பிஎம் விடுதலை பெற்றாலும் பாலன் காட்டிய வழியில் நெல்லையிலேயே 1963 இறுதி வரை மாவட்டச் செயலாளராக செயல்பட்டார் .

1948ஆம் ஆண்டு கல்கத்தா கட்சி காங்கிரஸிற்குப்பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. சுதந்திர இந்தியாவில் தடைகளை நேரடியாக சந்தித்த முதல் கட்சி நம் கட்சி தான்.

வெள்ளையர்கள் காலத்திலும் சதி வழக்கை சந்தித்த நெல்லை மாவட்ட கட்சி விடுதலைக்குப் பிறகும் நெல்லை சதி வழக்கை சந்தித்தது. 1950 வரை மாணிக்கத்தை காவல் துறையால் கைது செய்ய முடியவில்லை. நெடிய போராட்டத்திற்கு பிறகு, ஏழு நாட்கள் பட்டினி நிலையில் மாணிக்கம் கைது செய்யப்பட்டார். குற்றாலத்தில் அடித்து சித்திரவதை செய்யப்பட்டார். குற்றாலம், தென்காசி, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் , தூத்துக்குடி முதலிய காவல் நிலையங்களில் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார். மரித்து விட்டார் என்று அலட்சியமாக, ஆணவத்தோடு காவல்துறையால் தூக்கி வீசி எறியப்பட்ட மாணிக்கம் உயிர்த்தெழுந்தார்.நெல்லைச் சதி வழக்கு குற்றவாளியாக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

பாலன் எழுதுகிறார்'' 1949 இல் தொடங்கிய நெல்லைச் சதி வழக்கில் 100 பேர் சம்பந்தப்பட்டார்கள். முதல் எதிரியாக எனக்கு முன்பாகவே 15 பேர் ஆயுள் தண்டனைக்கு உள்ளாக்கப் பட்டார்கள். இறுதியாக தண்டிக்கப்பட்ட மூவரில் நான் ஆயுள் தண்டனை பெற்றேன் . என்னுடைய அந்தராத்மா என்னை ஒரு குற்றவாளி என்று கூறவில்லை. ஏன்? எனக்கு தண்டனை அளித்துத் தீர்ப்பு கூறிய நீதிபதியும் கூட, எங்களது குற்றங்களை யாவும் தன்னலம் கருதாத, கொள்கை ரீதியான அரசியல் குற்றங்களே என்று தெளிவு படுத்தியதுடன் தண்டனைக்குரிய குற்றங்களில் ஈடுபட்டு இருந்த பொழுது, எங்களிடம் மிகுந்திருந்த மனிதாபிமான உணர்ச்சியைப் பாராட்டியும் எங்கள் தோழர்களின் பெருந்தன்மையை புகழ்ந்துரைத்த அவரது வார்த்தைகள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக்

மதுரை ஆயுதப்போலீஸ் படையில் பணிபுரிந்த தோழர் பாலு தூக்கிலிடப்பட்டார். ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ராமநாதன் மதுரை சிறையில் 1952 ஆம் ஆண்டு நடந்த கொடிய அடக்கு முறையின் விளைவாக உயிர்துறந்தார்.

இரண்டு கம்யூனிஸ்டுகளை பலி கொண்ட பின்னரும் மதுரை சிறையில் அடக்குமுறை நிறுத்தப்படவில்லை. பகை உணர்ச்சியோடு தான் சிறை அதிகாரிகளும் கம்யூனிஸ்ட்களும் சிறையில் வாழ்ந்தோம்.

உடனே பழிவாங்கும் எண்ணம் கம்யூனிஸ்டுகளிடம் இருக்கவில்லை . காலம் வரும்போது தான் அடக்குமுறையை தூண்டி விட்ட சக்திகள் தண்டிக்கப்பட வேண்டும் . அதுவரை நமது கடமையைச் செய்வோம் என்ற உணர்வோடுதான், சிறையில் வாழ்ந்தோம். நெஞ்சில் வைராக்கியம் இருந்தது. வஞ்சம் தீர்க்கும் வெறியில்லை. சமுதாய மாறுதலுக்கு போராடும் கம்யூனிஸ்டு துன்பங்களை ஏற்கவும், தியாக உணர்வோடு கடமையாறவும் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற லட்சியத்தோடு சிறை வாழ்க்கையை கழித்தோம். தியாக வாழ்க்கைக்கு பாலன் ஒரு முன்னோடி''

தோழர் ப.மாணிக்கம் பற்றி பாலன் ஒரு இடத்தில் கூறுகிறார் ..''கைதிகள் குறித்து நான் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் பயன் இருந்ததை நான் உணர்ந்தேன். ஒரு கைதியை ''கோவை சிறை தந்த மாணிக்கம்'' என்று நான் பாராட்டிய பின் ''ஏதாவது குற்றம் செய்யும் போதெல்லாம்.. ஏண்டா, ஐயா உன்னை மாணிக்கம் என்று சொன்னாரே நீ இப்படி பண்ணலாமா?'' என்று ஒருவன் கடிந்து கொள்வதும் அதை உணர்ந்து அவன் திருந்துவதையும் நான் கண்கூடாக கண்டேன் .

இவர்களுடைய நெருங்கிய தோழமை உறவும் உணர்வு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது. செங்கொடி இயக்கம் ஈன்றேடுத்த தவப்புதல்வர்கள் தமிழகம் முழுவதும் சுற்றி சுழன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்ற மகத்தான பேரியக்கத்தை கட்டினார்கள். அவர்கள் தடத்தில் நம் பயணத்தை தொடர்ந்து மேற்கொள்வோம் ..

தொடர்புக்கு: **94434 68710**




| | | |
|---|---|---|
| 1848 | மார்ச் 18 | கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியானது |
| 1871 | பிப். 24 | பாரிஸ் கம்யூன் எழுச்சி |
| 1914 | ஆக. 4 | முதலாம் உலகப்போர் துவங்கியது |
| 1917 | நவ. 7 | மகத்தான ரஷ்ய புரட்சி தினம் |
| 1918 | நவ. 3 | முதல் உலகப் போர் முடிவிற்கு வந்தது. |
| 1939 | செப். 1 | இரண்டாம் உலகப்போர் துவக்கம் |
| 1941 | ஜூன். 20 | ஹிட்லர் சோவியத் மீது போர் தொடுத்தான் |
| 1945 | மே 7 | 2ஆம் உலகப் போரில் ரஷ்யாவிடம் ஜெர்மனி சரணடைந்தது |
| 1945 | ஆக. 6 | ஜப்பான் ஹிரோசிமா மீது அமெரிக்க அணுகுண்டு வீசியது |
| 1945 | ஆக. 9 | ஜப்பான் நாகசாகி மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது. |
| 1945 | செப். 2 | இரண்டாம் உலக்போர் முடிவு |
| 1945 | அக். 3 | உலக தொழிற்சங்க சம்மேளன அமைப்பு |
| 1945 | அக்.24 | ஐ.நா.சபை தோற்றுவிக்கப்பட்டது. |
| 1949 | அக். 1 | மக்கள் சீன குடியரசு உதயம் |
| 1959 | ஜன. 1 | கியூப புரட்சிகர குடியரசு பிறந்தது |
| 1961 | ஏப். 12 | யூரி ககாரின் முதல் முறையாக விண்வெளி சென்றார் |
| 1972 | ஜூன் 5 | உலக சுற்று சூழல் தினம் |
| 1975 | மார்ச் 8 | சர்வதேச பெண்கள் தினம் |
| 1976 | மார்ச் 26 | வங்கதேசம் விடுதலை பெற்றது |
| 1995 | ஜனவரி | டபிள்யூ.டி.ஓ. துவக்கம் |
| 2002 | ஜூன் 12 | உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு நாள் |

## தமிழ்நாட்டின் முக்கிய நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 1866 | ஜனவரி 24 | சென்னை பல்கலைக்கழகம் துவக்கம் |
| 1886 | மே 1 | சென்னையில் சிங்காரவேலர் மே தினம் கொண்டாடினார் |
| 1908 | பிப்ரவரி 27 | கோரல் மில்லில் வ.உ.சி.தலைமையில் வேலை நிறுத்தம் |
| 1925 | நவம்பர் 25 | சுயமரியாதை இயக்கம் துவக்கம் |
| 1926 | ஜூலை 1 | தமிழ்நாடு மின்வாரியம் துவங்கப்பட ஒப்பந்தம் |
| 1936 | நவம்பர் 7 | ஜனசக்தி துவக்கம் |
| 1946 | ஆகஸ்ட் 28 | மாபெரும் ரயில்வே வேலை நிறுத்தம் |
| 1946 | செப்டம்பர் 5 | பொன்மலை தியாகிகள் தினம் |
| 1948 | நவம்பர் 11 | கோவை ஸ்டோன்ஸ் மில் தியாகிகள் தினம் |
| 1949 | ஆகஸ்ட் 11 | கடலூர் சிறையில் துப்பாக்கிச் சூடு |
| 1949 | நவ.19 | மாரி, மணவாளன் மதுரையில் கொல்லப்பட்ட தினம் |
| 1956 | நவம்பர் 1 | தமிழகம் பிறந்தது |
| 1958 | டிசம்பர் 14 | தாமரை மாத இதழ் துவக்கம் |
| 1968 | டிசம்பர் 25 | வெண்மணி தியாகிகள் தினம் |
| 1972 | ஜூலை 5 | பெத்தநாயக்கன் பாளையம் விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு |

**இந்தியாவை ஒரு சமத்துவ நாடாக மாற்ற வேண்டும் என்ற கனவின் ஊடாக 1925 டிசம்பர் 26 அன்று பிறந்தது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.**

1924ல் எஸ்.ஏ.டாங்கே, முஸாபர் அகமது, நளினி குப்தா, உஸ்மானி ஆகிய நான்கு பேருக்கும் நான்காண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. கான்பூர் சதி வழக்கை போட்டு கம்யூனிஸ்ட்களை ஒழித்து விட்டோம் என்று வெற்றிக் களிப்பில் வெள்ளை அரசு இருந்தபோதுதான், கம்சனை அழிக்கப் பிறந்த கிருஷ்ணனைப் போல இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிறந்தது.

புகழ்பெற்ற கவிஞரும், விடுதலைப் போராட்ட வீரருமான ஹஸ்ரத் மொகானி வரவேற்புக் குழுவின் தலைவராக பொறுப் பேற்க தென்னகத்தின் முதல் கம்யூனிஸ்ட் மா.சிங்காரவேலர் தலைமை உரையுடன் அமைப்பின் முதல் மாநாடு தலைமறைவாக கான்பூர் நகரில் நடந்தேறியது.

**கட்சி பிறப்பதற்கு முன்பே வெள்ளை ஆட்சியால் தடை செய்யப்பட்டது. பலர் சதி வழக்குகளால் சிறைச்சாலையில் வாடி வந்தனர். இந்த போர்க்குணமிக்க புரட்சியாளர்களும், தேச பக்தர்களும் இணைந்து உருவாக்கியதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.**

போர்க்குணமிக்க வன்முறை சாகசங்களாலும் ஈடு இணை யற்ற தியாகங்களாலும் வெள்ளை ஆட்சிக்கு எதிராக போர் புரிந்த தேசபக்தர்கள். வெகு மக்களை விடுதலைக்கு ஆதரவாக அணி திரட்ட முடியாததால் அதிலிருந்து விடுபட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சங்கமித்தனர்.

புகழ்பெற்ற கதார் கட்சியை (கதார் என்றால் புரட்சி என்று பொருள்) சார்ந்த லாலா ஹர்தயால், சோகன்சிங் பாக்னா மற்றும் இந்தியாவை ஆயுதப் போராட்டம் மூலம் கைப்பற்றுவதற்காக வெளிநாட்டிலிருந்து காமகட்டமாரு கப்பல் மூலம் வருகை தந்த போராளிகள் பலர் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

கல்வி கற்க வெளிநாட்டிற்கு சென்ற எம்.என்.ராய், அபானி முகர்ஜி, வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, டாக்டர் பூபேந்திரநாத் தத்தா (சுவாமி விவேகானந்தரின் தம்பி) மற்றும் பலர் மாஸ்கோவில் கம்யூனிஸ்ட்டாகி, அங்கேயே சிலர் அங்கேயே சிலர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை 1920ல் நிறுவினர். ஆனால், ஒன்றுபட்ட கட்சி வெளிநாட்டில் கட்சி உருவானதை ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன், 1925 டிசம்பர் 26 தான் கட்சி அமைக்கப்பட்ட தினமாக ஏற்றுக் கொண்டது.

1922 லிருந்து 1924 வரை இந்தியாவின் வடமேற்கு பகுதியில் நுழைந்த முஹாஜிர்கள் எனப்படும் இஸ்லாமிய புரட்சியாளர்கள் மீது நான்கு பெஷாவர் சதி வழக்குகள் போடப்பட்டன. இதிலிருந்து பலர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

நவஜவான் சோசலிஸ்ட் படையை நடத்திய பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் தூக்கிலிடப்பட்ட பிறகு அவருடைய தோழர்கள் அஜய்கோஷ், ஷிவ்வர்மா, சோஹன் சிங் கோஷ் ஆகியோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

சிட்டகாங் ஆயுதக் கிடங்கு தாக்குதல் புகழ் சூரியா சென்னின் சீடர்களும், புரட்சிப் போராளிகளுமான கணேஷ் கோஷ் மற்றும் கல்பனா தத் ஆகியோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

ஒத்துழையாமை இயக்கத்திற்கு காந்தி அறைகூவல் விடுத்த போது சத்தியாகிரகிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்த, கார்வால் ஆயுதப்படை சார்ஜன்ட் சந்திரசிங் கார்வாலி சிறை தண்டனைக்குப் பிறகு வெளியே வந்தவுடன், புரட்சிகர இயக்கமாம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்.

வெள்ளை காலனியாதிக்கத்திற்கு எதிராக வெகுண்டெழுந்து போராடிய மணிப்பூர் ஜன நேத்தா (மக்கள் தலைவர்) இராபோர்ட் சிங் சிறை வாசத்தின்போதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்.

விடுதலைப் போராட்ட புரட்சியின் பல்கலைக்கழகங்களாக விளங்கிய அந்தமான், தியோலி, பக்ஸா, ஹிஜ்லி மற்றும் பிற சிறைகளில் இருந்து விடுதலை அடைந்தவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

1921 நவம்பர் 30லிருந்து டிசம்பர் 2 வரை ஜாரியாசில் நடைபெற்ற ஏஐடியூசியின் இரண்டாவது மாநாட்டில் முதல் தீர்மானம் இந்திய மக்கள் சுயராஜ்யம் அடையும் நேரம் வந்து விட்டது என்றது.

1928ல் சைமன் கமிஷன் பம்பாயில் வந்து இறங்கியபோது, 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏஐடியூசி தொழிலாளர்கள் பூரண சுயராஜ்யம் வேண்டும் என்றும், சைமன் கமிஷனே திரும்பிப் போ என்றும் கேட் வே ஆப் இந்தியா வரை ஊர்வலம் சென்றனர்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மகாசபை கூட்டம் 1928ல் கல்கத்தாவில் நடைபெற்றது. 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏஐடியூசி தொழிலாளர்கள் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலில் நுழைந்து பூரண சுயராஜ்யம் தேவை என்று தீர்மானத்தை முன்மொழிந்தனர்.

மீரட் சதி வழக்கில் கைதானவர்களுக்கு வாதிட நேரு தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. காந்தி சிறைக்கே சென்று அவர்களைச் சந்தித்தார். இவர்களில் பெரும்பகுதி கம்யூனிஸ்ட்கள்.

இவர்கள் மீது வாசிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் பிரிட்டிஷ் இந்திய இறையாண்மையை பேரரசிடம் இருந்து பறித்துக் கொள்ள இந்தியாவிலிருந்து தங்களுக்கு தெரிந்த, தெரியாத ஒவ்வொருவருடனும் சேர்ந்து சதி செய்ததாக வெள்ளை காவல்துறை குற்றம் சுமத்தியது.

அந்தமான தனி கொட்டடி சிறையில் மிருகத்தனமான சித்திரவதைக்கு பிறகு பலர் இறந்தனர். சிலர் விடுதலை அடைந்தனர். விடுதலையடைந்த அனைவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். ஆனால், எவரும் ஒருபோதும் வீரசவார்க்கரை போல மன்னிப்புக் கடிதம் எழுதியதில்லை!

நாடு விடுதலைப் பெற்ற போது, நவகாளியில் எழுந்த வகுப்புக் கலவரத்தை அடக்க நேரில் சென்றார் தேசப்பிதா காந்தி. ஆனால், நவகாளிக்கு சில மைல் தூரத்தில் இருந்த லால் ஹஸ்னா பாத் என்ற ஊரின் கதை அனேகருக்குத் தெரியாது. அங்கு ஏராளமான கம்யூனிஸ்ட் விவசாயிகள் அங்கு வந்த ஆயிரக்கணக்கான இந்துக்களுக்கு திரண்டு நின்று பேருதவிகளை செய்தனர். கலகக்காரர்களை மாவட்ட எல்லைக்குள் வரவிடாமல் தடுத்து நிறுத்தனர். அப்படி தடுத்து நிறுத்திய தோழர் லால் மோகன் சென் அந்தமான் சிறையில் இருந்து வெளிவந்து கம்யூனிஸ்டானவர். அவர் இக்கலவரத்தில் களப்பலியானர்.

புடம்போட்ட தியாக வரலாற்றுக்குச் சொந்தமான கம்யூனிஸ்ட் கட்சி 1925ல் தொடங்கியதைப் போலவே, கூட்டிக் கழித்துப் பார்த்தால் விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் 1925 நவம்பர் 27 ஒரு விஜயதசமியன்று ஹெட்கேவரால் தொடங்கப்பட்டது.

ஆர்.எஸ்.எஸ்.சின் குறிக்கோளாக வேத கால பழம் பெருமையான தர்மத்தை நிலை நாட்டுவது என்றும், நமது சமுதாயத்தில் ஒரு பிரிவினர் (பிராமணர்) தூய ஒழுக்கமும், தியாகம் முதலிய பண்புகளுடன் வாழ்த்து வந்தனர். அவர்கள் வாழ்வு அனைத்தையும், ஞானத்தை வளர்க்கிற பணியில் ஒப்படைத்திருந்தார்கள். இந்த சமூகத்திற்கு ஆணி வேர். இவர்கள்தான் உண்மையில் இந்து ராஷ்டிரத்தின் சிரஞ்சீவி யாக வாழ்ந்து வரும் ரகசியம் இதுதான் என்று தனது உயர்சாதிப் பிடிப்பை வெளிப்படுத்திக் கொண்டது.




ஆர்.எஸ்.எஸ். ஒரு இந்து அமைப்பு மட்டுமே. தான் ஒரு பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கம் அல்ல என்பதை பிரகடனப்படுத்தியது. இந்தியா சோசலி சத்தை நோக்கி செல்வதை தடுக்கவே இது உருவாக்கப்பட்டது என்றும் கூறிக் கொண்டது.

அரசியலை இந்துமயமாக்கு, இந்துக்களை ராணுவ மயமாக்கு என்ற பாசிச முழக்கத்தை எப்போதும் எடுத்து வைத்தது.

முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் எதிரிகள். கம்யூனிஸ்ட்கள் பயங்கரவாதிகள் என்றது. பாசிச கோட்பாடுகளை, வெறுப்பு அரசியலை உச்சிமுகந்து கொண்டாடியது.

விடுதலைப் போராட்ட தியாகிகளை பற்றி ஆர்.எஸ்.எஸ். வரையறுத்த போது இத்தகைய மனிதர்கள் பின்பற்றத் தக்கவர்களாக நமது சமுதாயத்தால் பார்க்கப்படவில்லை என்றது.

மனு ஸ்மிருதி விதிகள் உலகத்தாருக்கே ஆர்வத்தை தூண்டிக் கொண்டிருக்கிறது. ஒரு இயல்பான அடக்க ஒடுக்க மான (சாதி) சமூகத்தை அது படைத்தது. ஆனால், நமது அரசியல் சாசன சட்டத்திற்கு அதில் ஒன்றும் இல்லை என்று ஒதுக்கிவிட்டது என்று மனுஸ் மிருதியை உயர்த்திப் பிடித் தனர்.




**- எம்.ரவி**

# காரிருள் நீக்க வந்த கதிரொளி!

**உங்கள் கரங்களில் தவழும் இந்த "ஜனசக்தி" பத்திரிக்கை சாதாரணமான பத்திரிக்கையல்ல, பல அசாதாரணங்களையும் படைத்து தமிழக வரலாற்றில் தனி முத்திரை பதித்த பத்திரிக்கையாகும். ஜனசக்தி மற்ற பத்திரிக்கையைப் போல் பத்தோடு பதினொன்றல்ல.**

தனிநபர் யாருக்கும் சொந்தமாக்கப்படாத பொது சொத்தான ஜனசக்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை ஏடாக வெளிவந்து கொண்டுள்ளது.

ஜனசக்தி பத்திரிக்கையின் வரலாறு மெய்சிலிர்க்க வைக்கும் தியாக வரலாறாகும். தமிழ்நாட்டின் அரசியல், சமூக பொருளாதார வாழ்வில் பல விளைவுகளை உருவாக்கிய பத்திரிக்கை ஜனசக்தியாகும்.

ஜனசக்தியை துவக்கிய பேராசான் தோழர் ஜீவா முதற்கொண்டு தற்போது ஜனசக்தியின் ஆசிரியராகவுள்ள தோழர். கே.சுப்பராயன் வரை இந்தப் பத்திரிக்கையில் எழுதியவர்க, பணியாற்றியவர்கள் ஒவ்வொருவரும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் ஆவர்.

ஜனசக்தியில் வந்த செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், மிக மிக அற்புதமான, புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டவைகளாகும். ஜனசக்தியின் தியாக வரலாற்றை இன்றைய தோழர்களுக்கும், வாசகர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனவே, ஜனசக்தியின் வரலாற்றை தொடர்ந்து வெளியிடவுள்ளோம். இதனைப் படித்து பார்ப்பதோடு ஜனசக்தியை அனைத்துத் தரப்பு மக்களிடம் குறிப்பாக உழைக்கும் மக்களிடம் கொண்டு செல்ல அனைவரும் பாடுபடுவோம்!

**பிறந்தது ஜனசக்தி:**

இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் முடிவின்படி 1937 ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் தேதி அன்று சென்னை மாகாண சட்ட மன்றத்திற்கான தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டன.

இந்த தேர்தலில் தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கோவை தொகுதியில் ஏஐடியூசியின் தமிழக தலைவர்களில் ஒருவரான காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் சார்பாக தோழர். ஜீவானந்தம் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டு, வேட்புமனுவும் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், கோவை மில் முதலாளிகள் ஜீவானந்தம் போட்டியிடுவதை விரும்பவில்லை. அதற்கு மாறாக காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்.ஜி.ராமசாமி அவர்களை வேட்பாளராக அறிவிக்க வைத்தனர். காரணம், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலில் ஏஐடியுசியின் தலைவரான ஜீவானந்தம் தலைமையில் கோவையில் தொழிலாளி வர்க்கத்தின் வீரமிக்க போராட்டங்கள் நடைபெற்று வந்த காலகட்டம் அன்றைய காலகட்டம்.


janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi

புதியதோர் உலகம் செய்வோம்

ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2021 செப்டம்பர் 12 - 18 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 23

ஆர்.எஸ்.எஸ்.சின் வகுப்புவாத வக்கிரம்! — ப 08

அணிதிரட்ட ஆயத்தமாவீர்! — ப 02

பணமாக்கல் திட்டமா? மக்களை பிணமாக்கும் திட்டமா? — ப 03

அப்டேட்ஸ் 12 - 18

செப்.25 ஏ.பி. பரதன் பிறந்த நாள்

செப்.27 பகத்சிங் பிறந்த நாள்

செப்.25 சி.கெ.மாதவன் நினைவு நாள்

செப்.30 பி.சீனிவாசராவ் நினைவு நாள்

ஜனசக்தி சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா ரூ.500/-

2 ஆண்டுச் சந்தா ரூ.1000/-

